ஞானத்திற்கான வார்த்தைகள்

உங்கள் கல்வி, வேலை, குடும்பம் மற்றும் வாழ்க்கைக்காக








Dr. எபி சுந்தர் ராஜ்

பொறியியல் பேராசிரியர், மேலாண்மை பயிற்சியாளர், கலாச்சார மானுடவியலாளர், சமூக ஆர்வலர், ஆவிக்குரிய வழிகாட்டி மற்றும் எழுத்தாளர்.

கடந்த 50 ஆண்டுகளில் எழுதியவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 130 ஞானத்திற்கான வார்த்தைகள் இந்த தொகுப்பில் உள்ளன. இவை கல்வி, வேலை, குடும்பம் மற்றும் வாழ்க்கையின் அனைத்து பகுதிகளையும் தொடும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன.

ஞானத்திற்கான வார்த்தைகள்

WORDS FOR WISDOM

உன் படிப்பு, வேலை, திருமணம் மற்றும் வாழ்க்கைக்காக

ஆசிரியர்
Dr. எபி சுந்தர் ராஜ்

மாணவர்கள், வேலை பார்க்கும் இளைஞர்கள் மற்றும் நடுத்தர வயதினருக்கு இன்றியமையாத வாசிப்பு.
ஆசிரியர்கள், வழிகாட்டிகள் மற்றும் சிந்தனையாளர்களுக்கும் பயனுள்ளது.

பொறியியல் பேராசிரியர், மேலாண்மைப் பயிற்சியாளர், பண்பாட்டு மானிடவியலாளர், சமூக ஆர்வலர், ஆன்மீக வழிகாட்டி மற்றும் எழுத்தாளருமான டாக்டர் எபி சுந்தர் ராஜ் அவர்களின் கடந்த ஐம்பது ஆண்டுகால எழுத்துக்களிலிருந்து இந்த மேற்கோள்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. புகழ்பெற்ற அறிஞர்களால் திருத்தப்பட்ட இந்த மேற்கோள்கள், இளைஞர் வாழ்க்கை மற்றும் பணியின் அனைத்துத் தளங்களையும் உள்ளடக்கியவை.

பொருளடக்கம்

தலைப்புகள்	மேற்கோள் எண்கள்
நீ ஒரு ஆசீர்வாதம்	1,3,15,58,65,84,85,91,101
உன் படிப்பு	5
உன் நண்பர்கள்	33,100
சக இளையோர் அழுத்தம்	9,52,74,104
உன் பயங்களும் வெட்கங்களும்	48
நான் அழகானவளா	10
நான் புத்திசாலியா	11
அறிவியலின் எல்லைகள்	4, 8,12,14,60
இனப்பெருக்கம்	7,19,22,24,31,34,38,46,50,59,89,91
டேட்டிங், ஆண் / பெண் நண்பர்கள்	28,31,59
திருமணம்	20,23,25.75,99,116
பணி வாழ்க்கை	32,39,42,44,56,66,70,77
முரண்பாடுகளைத் தீர்த்தல்	70,114
கோபம் / மனவேதனை மேலாண்மை	41,43
மன்னித்தல்	44
மதுவும் போதைப்பொருளும்	21,36
கருக்கலைப்பு	19,37
ஊடக அடிமைத்தனம்	47,98,103
தற்கொலை	72,82,108
சாதிவெறி, அடிமைத்தனம், இனவெறி	62,63,80,82
அற்புதங்களின் நோக்கம்	27
துன்பங்களின் நோக்கம்	55
பெண்மை-மறுப்புவாதம்(Feminihilism)	84
தியானம்	106
பெருமையும் பொறாமையும்	110,125,127,131
சமூக நீதி	49,85
சுதந்திர அடிமைகள்	103
மறுமை வாழ்வு	66,82,112
நான் இருக்கிறேன் I AM THAT I AM	6,8,17,18,60,61,76,83,85,92,96,98

1. நீயே ஆசீர்வாதம்

நீ பிறவியிலேயே பெற்றுக்கொண்ட எதற்கும் -- வறுமையோ, உடல்நலக் குறைவோ, தோற்றமோ, ஒடுக்குமுறையோ, அடிமைத்தனமோ, சாதியோ, குலமோ, இனமோ -- நீ பொறுப்பாளி அல்ல; ஆகவே அவற்றைக் குறித்து வெட்கப்பட வேண்டியதில்லை. நீ எதைக்கொண்டு உன் வாழ்க்கையை முடிக்கிறாய் என்பதற்கே நீ பொறுப்பாளி. உன் வாழ்க்கையை உன் தேசத்திற்கு ஒரு ஆசீர்வாதமாக முடிக்க உன்னால் முடியும். நீ பெற்ற ஒளியும், வல்லமையும், நீ எதிர்கொண்ட நல்லனவும், தீயனவுமான சூழல்களும் வாய்ப்புகளும், தடைகளும் -- இவற்றுள் நீ கடந்த தூரத்திற்கு ஏற்ப, தேவையுள்ள சமுதாயத்திற்கு நீ செய்த பங்களிப்பை தேவன் மதிப்பிட்டு பலனளிப்பார். தேவன் ஞானமும் மாசற்றவருமான நீதிபதி. இப்பொழுதோ, பின்னரோ, அல்லது மறுமையிலோ; உனக்கோ உன் சந்ததியினருக்கோ அவர் பலனளிப்பார். ஆதியாகமம் 1:28; 9:1; 12:2; 22:18; 26:4; உபாகமம் 10:8; 27:12; சங்கீதம் 1:1–3; 112:2; 128:1–6; ஏசாயா 43:4,18; 49:4–16; 52:7; எரேமியா 1:4–10; மல்கியா 3:14–17; மத்தேயு 5:3–16; 25:34; லூக்கா 1:28; ரோமர் 12:14; 1 கொரிந்தியர் 4:12.

2. பலவீனருடைய தேவன் (God of the weak)

மனித சித்தாந்தங்கள் "தகுதியுடையவை மட்டுமே வாழும்" (Survival of the fittest) என்பதைப் போதிக்கின்றன. தேவனோ பலவீனருடைய வாழ்வை உறுதிப் படுத்துகிறார். ஏசாயா 25:4–8; 35:3,4; 40:11,29–31; 41:10–18; 42:3; 43:1–4; 49:15; 57:15; 60:22; 61:1–3; லூக்கா 12:6,7.

3. நீ நினைப்பது போல் நீயல்ல (You are not)

நீ உன்னைக் குறித்து என்ன நினைக்கிறாயோ -- தாழ்வாகவோ உயர்வாகவோ -- அதுவல்ல நீ. நீ பார்ப்பது, கேட்பது, பேசுவது, வாசிப்பது, தியானிப்பது, செய்வது, ஒவ்வொரு நாளின் மூன்று ஓய்வு மணிநேரங்களில் நீ தொடர்பு கொள்கிறாயோ -- அதுவே நீ. சங் 139:1–4,23,24; நீதி 21:2; 26:12; ஏசா 55:8.

4. நம் அறியாமையைக் கண்டறிதல் (Discover our ignorance)

அறிவு என்பது எலக்ட்ரான் நுண்ணோக்கியும் வான தொலைநோக்கியும் போன்றது. நீ எவ்வளவு அதிகமாகப் பார்க்கிறாயோ, அவ்வளவு அதிகமாக நீ பார்க்காதவற்றைக் கண்டுகொள்கிறாய். மனிதன் தேவன் அல்ல. உபா 29:29; ஏசா 46:9,10; எரே 32:17; தானி 2:22; மத் 13:35; 1 கொரி 2:10; 4:5.

5. உன் படிப்பு

நான் என் அலட்சியத்தால் கல்லூரியின் முதலாண்டில் தோற்றுப்போய், தொழிலிலும் குணத்திலும் பேரழிவைச் சந்திக்கும் தருவாயிலிருந்து அரிதாய் தப்பினேன். உன் கல்லூரிப் படிப்பின் நான்கு முதல் ஆறு ஆண்டுகள், அடுத்த நாற்பது ஆண்டுகால உன் தொழிலையும் குணத்தையும் தீர்மானிக்கின்றன. அதைக் கொண்டு விளையாடாதே. உன் புத்தகங்களைப் படி. தேவனுடைய புத்தகத்தையும் படி. அந்த ஆறு ஆண்டுகளுக்கு வேறெதுவும் முக்கியமல்ல. சங் 19:7–11; 90:12; 119:9,37; 138:2; பிர 12:1; மத் 4:4; எபே 5:15,16; 6:18.

6. வடிவமைக்கப்பட்ட தெய்வங்கள் (Customised gods)

எல்லா மதங்களின் தெய்வங்களையும் தன் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைத்து மனிதன் வெற்றி பெற்றுவிட்டான். ஆனால் அனைத்து மனிதரையும் தம் பிரபஞ்ச ஆட்சிக்கேற்ப வடிவமைக்க உறுதியாக இருப்பவர் ஒரே தெய்வம். யாத் 20:4–6; சங் 46:10; மாற் 11:17; யோவா 14:6; அப் 4:12; 7:49,50; 17:23; ரோம 1:23.

7. இனப்பெருக்கம் (Reproductive Responsibility)

தேவன் "இனப்பெருக்கப் பொறுப்பை" (புதிய உயிரைப் பெறவும், காக்கவும், அது இனப்பெருக்க வயதை அடையும் வரை ஆதரிக்கவும் மனிதன் மேல் கடமையாக) படைத்து நியமித்தார். அறிவற்றவர்கள் அதற்கு "செக்ஸ்" (sex) என்று பெயரிட்டனர். "செக்ஸ்" என்ற அறிவியலற்ற வார்த்தைக்குப் பதிலாக, வேதப்பூர்வமான, அறிவியல்பூர்வமான "இனப்பெருக்கப் பொறுப்பு" (reproductive responsibility) என்ற வார்த்தையை நீ உறுதியுடன் மீட்டெடுத்துப் பயன்படுத்தினால், உன் மனதிலும் ஆவியிலும் உன் சமுதாயத்திலும் பெரும் ஆரோக்கியத்தைக் காண்பாய். மாற் 7:21–23; ரோம 1:24; எபி 13:4.

8. அற்புதம் (Miracle)

அற்புதம் என்பது, விஞ்ஞானிகள் இன்னும் கண்டறியாத பிரபஞ்ச விஞ்ஞான விதிகளின்படி தேவன் செயல்படுவதே. ஏசா 46:10; 55:8,9.

9. சக இளையோர் அழுத்தம் (Peer Pressure)

"சக இளையோர் அழுத்தம்" என்பது, முதுகெலும்பற்றவன் (spineless), இதய மற்றவர்களின் (heartrless) அழுத்தத்திற்கு அடிபணிந்து, சிந்தனையற்ற வர்களின் (brainless) சமூக ஏற்பைப் பெற முயலும், தப்பிக்கும் சாக்கு. சங் 1:1–6; 19:7–14; நீதி 28:1.

10. நான் அழகானவளா? (Charm or Beauty)

அழகுத் தொழிலும் அழகுப் போட்டிகளும் நம் பெண்களின் நிறம் மற்றும் உடலமைப்பு குறித்த கவலையின் மேல் கட்டப்பட்ட பில்லியன் டாலர் தொழில்கள். இந்த வணிகர்கள், நம் மகள்களுக்கு அழகை (beauty) வரையறுக்கும் உலகளாவிய உரிமையை (world copy right) தமக்குத்தாமே எடுத்துக்கொண்டுள்ளனர். பெண்மையழகு (female charm) சிகரம் போன்றதல்ல, விரிந்து பரந்தது. அழகு ஒற்றையானதல்ல; ஆயிரக் கணக்கான நிறங்கள், வடிவங்கள், அளவுகள், புன்னகைகளில், பன்மையானது. ஒவ்வொரு பெண்ணும் பெண்மையழகில் (female charm) வளர முடியும், வளரவும் வேண்டும். குரல், நடத்தை, மென்மை, கருணை, உணர்திறன், விசுவாசம், பிணைப்பு, ஒற்றுமை, கற்பு, உணர்வுகள், ஆகியவற்றை உள்ளடக்கியது பெண்மையழகு (female charm). உன் தோற்றத்தைக் குறித்து உன்னைத் தாழ்வுணர்வுக்குள் தள்ளும் வணிக மனிதர்களை குறித்து எச்சரிக்கையாய் இரு; அவர்கள் உன் பணத்தைத் திருடவே அப்படிச் செய்கிறார்கள். நீ பெண்மை கவர்ச்சியோடு (female charm) படைக்கப்பட்டவள். நீதி11:22; 31:30; ஏசா 52:7.

11. நான் புத்திசாலியா (Am I Smart)

ஸ்மார்ட்போன், ஸ்மார்ட் சிட்டி, ஸ்மார்ட் மனிதர்கள் - இவையே இன்று. இளையோர் தங்கள் திறமைகளை முடிந்தவரை கூர்மைப்படுத்த வேண்டும். வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டே இரு. நல்லதனவுடன்(goodness)

திறமை(smartness) சேர்ந்தால் பெரிதைச் சாதிக்கலாம். திறமையின்றி நல்லதனம் இருந்தால் குறைவாக சாதிக்கலாம். நல்லதனமின்றி திறமை மட்டும் இருந்தால் நிலைத்த மதிப்புள்ள எதையும் சாதிப்பதில்லை. திறமையுடையோர் வேகமாக நகர்கிறார்கள், ஆனால் நிலையான திசையின்றி. நல்லவர்கள் மெதுவாக நகரக்கூடும், ஆனால் நிலையான திசையுடன். திறமையுடையோர் போற்றப்படுகிறார்கள், நேசிக்கப் படுவதில்லை. நல்லவர்கள் நேசிக்கப்படுகிறார்கள், இவ்வுலகால் போற்றப் படுவதில்லை. சங் 1:1–3; 127:2; நீதி 26:12.

12. விஞ்ஞானிகள் இங்கே முடிவடைகிறார்கள் (Scientists end here)

உயிரியலோ, இயற்பியலோ, கணிதமோ -- ஆயிரக்கணக்கான அறிவியல் விதிகளில் (Laws) எதையும் எந்த விஞ்ஞானியும் உருவாக்கவில்லை (create). விஞ்ஞானியால் அவற்றைக் கண்டுபிடிக்க மட்டுமே முடிந்தது (discover). தேவனே அந்த விதிகளைப் படைத்தார். அவற்றை மறைத்தும் (covered) வைத்தார். உபா 29:29; சங் 90:2; 139:13,14; நீதி 25:2; தானி 2:22; 1 கொரி 1:22–30; 2:9.

13. அடிமை முழக்கங்கள் (Slavery slogans)

"வேகமானது, புதியது, பெரியது, செல்வந்தமானது, முதலில் வருபவர்" -- இந்தச் சந்தை முழக்கங்களின் இடையறாத தாக்குதல், "வாழ்க்கையின் அழுத்தத்திற்கு" (pressure of life) அடிமையாக்கும் முழக்கங்கள். மனிதன் சிந்திக்கவோ, ஆராயவோ, கேள்வி கேட்கவோ அனுமதிப்பதில்லை. ஓய்வெடு. (relax, slow down) உன் மீட்பர் அவசரமின்றி ஆளுகிறார். யாத் 20:9–11; 33:14; சங் 23:2; நீதி 15:16; 16:8; 19:2; பிர 3:11; 8:6; 12:1,13,14; ஏசா 30:15; 32:17,18; மத் 11:28; லூக் 12:20,21; பிலி 4:19; 1 தீமோ 6:6–10; யாக் 4:1–4; 1 யோவா 2:16,17.

14. அறிவும் ஞானமும் (Knowledge vs wisdom)

அறிவு மனிதன் தேடி சேர்ப்பது (by horizontal acquisition). ஞானம் கிடைப்பதோ செங்குத்தான கீழ்ப்படிதலின் மூலம் (by vertical obedience). ஆதாம் அறிவைப் பெற்றான், ஆனால் ஞானத்தை இழந்தான். ஒழுக்கத்துடன் நிர்வகிக்கும் ஞானமின்றி அறிவு அதிவேகமாக வளர்வதே, இன்று கீழ்ப்படியாத மனிதகுலம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய ஆபத்து. (see Artificial Intelligence) ஆதி 2:9; 3:7; நீதி 1:1–33; 2:1–22; 3:1–26; 9:10; ஏசா 11:1–3; தானி 12:3,4; லூக் 2:51,52.

15. எப்படியோ கீழ்ப்படி

கிதியோன் தேவனுடைய கட்டளையை இரவில் கீழ்ப்படிந்தான், ஏனெனில் பகலில் கீழ்ப்படிய அவன் அஞ்சினான். எப்படி கீழ்ப்படிந்தாய் என்பது முக்கியமல்ல, கீழ்ப்படிந்தாய் என்பதே முக்கியம். தேவனுடைய நெறிமுறைகளுக்குக் கீழ்ப்படியும்போது, தற்காலிகமாக விகாரமாகவும், மரியாதையிழந்தவனாகவும், குழப்பமானவனாகவும், பதட்டமான வனாகவும், நிச்சயமற்றவனாகவும், தாழ்த்தப்பட்டவனாகவும், தடுமாறுபவனாகவும் நீ உணரக்கூடும். ஆனால் தேவனுடைய பார்வையில் நீ உயர்ந்தவனாகிறாய். கம்பீரமான (majestic) கீழ்ப்படிதலுக்காகக் காத்திராதே. அது ஒரு கட்டுக்கதை. நியா 6:27; 7:10.

16. காப்பகங்கள் (Sanctuaries)

மனிதனுக்கு இரண்டே பரிசுத்த காப்பகங்கள் உள்ளன -- மனிதனின் உச்சியும் (mind) பெண்ணின் அடித்தளமும் (uterus). ஒன்று நம் பிறப்பிற்கும் வளர்ச்சிக்கும், மற்றொன்று நம் புதுப்பிறப்பிற்கும் வளர்ச்சிக்கும். ஆகவேதான் இருள் சக்திகள் அனைத்தும் ஊடகத்தின் மூலமும், திரைப்படங்களின் மூலமும், விபச்சாரம் மூலமும், ஆபாசத் தொழிலின் மூலமும் இந்த இரண்டு பரிசுத்த இடங்களை மட்டுமே தூய்மைகெடுக்க உறுதியாக இருக்கின்றன. சங் 19:14; ஏசா 7:17; 66:1,2; மத் 1:20; லூக் 1:15,35; யோவா 17:17; ரோம 8:5–7; 12:2; 2 கொரி 6:16; பிலி 2:5.

17. நெறிமுறை, புராணமல்ல (Ethics not Mythology)

பரிசுத்த வேதம் மந்திரங்களையோ மாய நம்பிக்கைகளையோ சூட்சுமங்களையோ வழங்கவில்லை. அதில் ஐந்தில் நான்கு பங்கு தனிமனித, குடும்ப, குலம், தேசிய வரலாறு. இவற்றை விலக்கிப் பார்த்தால், பரிசுத்த வேதம் தனிநபர் (personal) மற்றும் சமூக (social) நெறி முறைகளுக்கான உலகளாவிய, நித்திய பாடநூல் (cosmic ethical text book). தனித்துவம் என்னவெனில், நெறிமுறைய (ethics) பூரணமாகப் பின்பற்ற இயலாதவருக்கு ஒரு மீட்பரையும் (Redeemer) அது வழங்குகிறது. சங் 1:1–3; 19:7–11; 119:9,11,34,37,39,99; ரோம 2:6–16.

18. சடங்குகள் (Rituals vs Relationship)

எல்லா மதங்களும் சடங்குகளைக் கட்டமைக்கின்றன. ஆனால் தேவனோ உறவுகளை மட்டுமே கட்டமைக்கிறார்; செங்குத்தும் (vertical and horizontal) கிடைமட்டமும்மான உறவுகள்.

19. திருமணத்திற்கு புறம்பான உறவு (Pre and extra marital sex)

பன்முக மானிடவியல் ஆய்வுகள் நமக்குக் காட்டும் ஆதாரம் என்னவெனில், கருவளம் வழிபாட்டு மதங்களும் (fertility cults) அதனால் விளையும் குழந்தைகளை பலியிடும் வழக்கமும் (child dsacrifice) எப்போதும் இணைந்தே செல்கின்றன. ஏனெனில் இனப்பெருக்க உடன்படிக்கை (திருமணம்) உடலுறவுக்கு முன்னதாகவே இருக்க வேண்டும், பின்னதாக அல்ல. இந்த இரண்டு படிகளும் தலைகீழாகவோ, பிரிக்கப்பட்டோ இருந்தால், குழந்தைப் பலி தவிர்க்க முடியாதது - பண்டைய நாட்களில் காட்டு பாலியல் தெய்வங்களின் கல் பீடத்திலும், இன்று (abortion) மருத்துவமனைகளின் அறுவை மேசையிலும். உபா 9:4,5; 12:30,31; கலா 5:19,24; 2 தீமோ 2:22; வெளி 21:8.

20. திருமணம் என்ற சமூகக் கடமை (Marriage a collective social covenant)

திருமணம் என்பது, குறைபாடுள்ள (imperfect) ஒரு சமூகத்தின் தொடர்ச்சிக்காகவும் அதன் உயர்வுக்காகவும், நேசிக்கவும் வாழவும் கற்றுக்கொள்ள உடன்படிக்கை செய்யும் இரு குறைபாடுள்ள (imperfect) தம்பதியர் . இதுவே தேவன் மனிதருக்குக் கொடுத்த உன்னத கடமையை நிறைவேற்றுவது. திருமணம் ஒருபோதும் இருவரின் தனிப்பட்ட விஷயம் அல்ல. திருமணம் ஒரு கூட்டு சமூக உடன்படிக்கையும் கடமையும். சமுதாயம், தன் பதிவாளர்(Registrar) மூலம், மகப்பேறு விடுமுறை முதல் மருத்துவ பராமரிப்பு, கல்வி வரை தம்பதிக்கு சமூக ஆதரவு அளிக்க உடன்படிக்கைக் கடமை உடையது. திருமண வாழ்க்கை ஒருபோதும் பூரணமானதல்ல.

பூரணமானவர்களுக்கு உடன்படிக்கையோ சமூக ஆதரவோ தேவையில்லை. ஆதி 1:28; மல் 2:15.

21. சமூக மது அருந்துதல் (Social Drinking)

உலகெங்கும் உள்ள 50 கோடி குடிகாரர்களும் "சமூக" (social) மது அருந்துவதில் தொடங்கி, சமூக விரோதிகளாக (anti social) முடிந்தார்கள். இன்று உலகெங்கும் நடக்கும் குற்றங்கள் மற்றும் சாலை விபத்துகளில் பாதி மது அடிமைகளால் நிகழ்கின்றன. அவர்கள் கலவரம் செய்கிறார்கள், கொள்ளையடிக்கிறார்கள், கொலை செய்கிறார்கள், சொந்த பிள்ளைகளை கற்பழிக்கிறார்கள். பரிசுத்த வேதம் மது அடிமைத்தனத்திற்கு எதிராக எழுபது முறை எச்சரிக்கிறது. ரோம காலனித்துவ காலத்தில் கிரேக்க பண்பாடும் தத்துவமும் ஏற்படுத்திய தாக்கமே பாலஸ்தீனத்தில் இந்த மிதமான (moderation) பயன்பாட்டை (Yayin diluted non intoxicant) உருவாக்கியது. எபிரெயர் (கர்த்தரும் உட்பட) மதுவை பயன்படுத்தினர், ஆனால் போதைக்குக் (Sekar, hard drink) கீழேயே; ஏனெனில் அன்று திராட்சை ரசத்தை புளிக்காமல் பாதுகாக்கும் பதப்படுத்தி எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. அவர்கள் அதை வீட்டில், மூத்தோர் முன்னிலையில், மிதத்தை (dilution) உறுதிசெய்யும் வகையில் அருந்தினர்; இன்று இருளிலும் மறைவிலும் (hard drink) அருந்துவது போல் அல்ல. தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள், அரசர்களுக்கு, மது முற்றிலும் தடைசெய்யப்பட்டிருந்தது, ஏனெனில் அவர்கள் தேவனுடைய அதிகாரிகளாக சமுதாயத்தின் மேல் இருந்தனர். இப்போது எல்லா விசுவாசிகளும் அந்த பதவியை வகிக்கின்றனர். எனவே, மதுவைத் தவிர். "நான் உணவுக் கட்டுப்பாட்டில் (under diet) இருக்கிறேன்"; "எனக்கு மருத்துவர் சொன்னார்" (I am under medical advice) -- இவை மது வழங்கப்படும்போது நிராகரிக்க, ஞானமான வார்த்தைகள். நீதி 23:31–32; 31:3; எபே 5:18–19.

22. வீழ்ச்சி (The descent)

ஆர்வம் (curiosity), ஈர்ப்பு, ஒரே ஒரு தடவை, இன்பம், உடனடி பாதிப்பில்லை, இரண்டாம் தடவை, பழக்கம், அடிமைத்தனம், வெறி, பேய்குடிபுகுதல் -- இதுவே வரிசை. Curiosity இதுவே பேயின் அடிமைத்தனத்திற்கான முதல் படி. ஆதி 3:6; சங் 19:14.

23. காதல் மணமா ஏற்பாட்டு மணமா (Love marriage or Arranged marriage)

இது ஊடகங்களால் உருவாக்கப்பட்ட கட்டுக்கதை. உண்மையில் இரண்டே வகைகள் உள்ளன -- இச்சைத் திருமணம், விவேகத் திருமணம். முதல் பார்வையில் ஏற்படும் காதல், முதல் சண்டையிலேயே தொலைந்துவிடும். விவேகத் திருமணத்தில், ஆணும் பெண்ணும் தங்கள் தொழிலில் (career) தன்னிலை நிலைநிறுத்திய பின், முதிர்ந்த வழிகாட்டிகளும் (mentors) பரிசுத்த ஆவியும் தரும் விழுமியங்களுடன் (values), தங்கள் வாழ்க்கைத் துணையை வெளிப்படையாகவும் பொறுப்புடனும் ஜெபத்துடனும் தேர்ந்தெடுக்கிறார்கள். (Shortlisting of names) குறுந்தேர்வு பையனாலோ பெண்ணாலோ செய்யப்பட வேண்டும். வழிகாட்டிகளும் பெற்றோரும் இந்தப் பட்டியலில் பேர் சேர்க்க உதவலாம், ஆனால் அவர்கள் பணத்தாலோ சாதியாலோ அந்தஸ்தாலோ சொத்தாலோ மற்றெந்த மாம்சீக காரணிகளாலோ இயக்கப்படக்கூடாது. உயர் பொறுப்புள்ள வாழ்நாள் வேலைக்கு (permanent job)நியமிப்பது போல, வரன்களை பற்றிய முழுமையான குறுக்கு ஆய்வு (full references) உனக்கு அவசியம். முதலில்

தகுதிகளைப் பட்டியலிடு. பின்பு அந்தத் தகுதிகளுக்கேற்ற பெயர்களைப் பட்டியலிடு. இந்த வரிசையைத் தலை கீழாக்காதே. திருமணம் வாழ்நாள் முழுமைக்குமானது. அதைக் கொண்டு விளையாடாதே. நீதி 31:10.

24. தனிமை, ரகசியமல்ல (Privacy not Secracy)

புதிதாக மணமான ஒரு தம்பதிக்கு அதிக தனிமை உண்டு. அவர்கள் தங்கள் தனிமையைப் பற்றி குற்ற உணர்வு கொள்வதில்லை. ரகசியமாய் செயல்படுபவனோ அசாதாரணமாக உணர்கிறான். ஏனெனில் ரகசியமாகச் செய்யப்படும் எதுவும் தீமையானது, மேலும் அது பேய்த்தனத்திற்கு உன் கதவைத் திறக்கிறது. ஆகவேதான் ஒருவருக்கொருவர் அறிக்கை செய்வது எல்லா அடிமைத்தனங்களையும், மோசமான உறவுகளையும் பேய் பிடிப்புகளையும் உடைக்கிறது. முதிர்ந்த ஒரு மூத்தவர் உன் எல்லா செயல்களையும் திட்டங்களையும், உன்னை அழுத்தும் (compulsive thoughts) எண்ணங்களையும் அறிந்திருக்க வேண்டும். ரகசியத்தை (secracy) தனிமை என்று (privacy) தவறாக நினைக்கும் பல இளையோருக்கு அவசியமானது. சங் 139:1–4, 23–24; நீதி 28:13; மாற் 4:22; யோவா 3:19–21; 8:12; 12:35; எபே 5:11–13; எபி 4:12–13; 1 யோவா 1:6–9; வெளி 21:11–12.

25. விவாகரத்து

திருமணம் ஒரு மூன்று தரப்பு உடன்படிக்கை (Tripartite Union). கணவன் விதையைத் தருகிறான், மனைவி முட்டையைத் தருகிறாள், தேவன் ஆவியைத் தருகிறார். ஆகவே, மூன்றாம் தரப்பினரான தேவனுடைய, (பிரபஞ்சத்தின் நீதிபதியின்), சம்மதமின்றி திருமணத்தை உடைக்க முடியாது. எச்சரிக்கையாய் இரு. மல் 2:13–16; மத் 19:3–9.

26. அனைவரும் மீட்கப்படலாம்

தான் நோயுற்றிருப்பதை ஒப்புக்கொள்பவர் அனைவரையும் அரசு மருத்துவ மனை சேர்த்துக் கொள்கிறது. தன் அறியாமையை ஒப்புக்கொள்பவர் அனைவரையும் அரசுப் பள்ளி சேர்த்துக்கொள்கிறது. தன் தோல்விகளை ஒப்புக்கொள்பவர் அனைவரையும் மீட்பர் சேர்த்துக்கொள்கிறார். எனினும் சேர்க்கைக்கும் தொடர்ச்சிக்கும் நிபந்தனை உண்டு. நம்பிக்கையும் கீழ்ப்படிதலும்.இதையே "விசுவாசம்" என்று அழைக்கின்றனர். நிறுவனத்தில் நம்பிக்கை வை; உன் வளர்ச்சிக்கான அறிவுரைகளுக்குக் கீழ்ப்படி. கீழ்ப்படியாமை மட்டுமே உன்னை வெளியேற்றும் கதவு (self exit door). 1 கொரி 9:24–27; 10:12; 2 பேது 1:5–10.

27. அற்புதத்தின் நோக்கம் (Purpose of Miracles)

இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன், "கடைசி நிலை" புற்றுநோயிலிருந்து (terminal cancer) தெய்வீக தலையீட்டால் நான் குணமாக்கப்பட்டேன். தம் வார்த்தையின்படி இத்தகைய எப்போதாவது நிகழும் மேலியல் தலையீடுகளை நமக்கு அளிப்பதன் மூலம், தேவன் தம் வாக்குறுதிக்கேற்ப (பரிசுத்த வேதத்திற்கேற்ப) நடந்துகொள்வார் என நாம் எதிர்பார்க்க (நம்ப) பயிற்சி தருகிறார்; அதனால், அத்தகைய மேலியல் தலையீடுகளைப் பெறுவதற்கு முன்னும் பின்னும், தம் பரிசுத்த வேதத்திற்கேற்ப நாம் நடந்துகொள்வோம் என தேவனும் எதிர்பார்க்கின்றார். தேவனுடைய நம்பகத்தன்மை, மனிதனிடமிருந்து பரஸ்பர நம்பகத்தன்மையை எதிர் பார்க்கிறது. இதுவே ஒவ்வொரு அற்புதத்தின் இறுதி நோக்கம். (எல்லோரும்

எல்லா அற்புதங்களையும் பெறமாட்டார்கள். அற்புதங்கள் இல்லாதபோதும் காட்டப்படும் மனித நம்பகத்தன்மையின் மதிப்பு அதனினும் மேலானது.) சங் 50:15; லூக் 5:1–11; மத் 11:20–24; யோவா 5:14.

28. பொறி (Trap)

இப்போது ஆண்/பெண் நண்பர்களுடன் ஊசலாடுவது, உன் வருங்கால கணவனை / மனைவியை நம்பும் உன் திறனை நிரந்தரமாக அழித்துவிடும். சிறு விஷயங்களில்கூட நீ நேர்மையற்றவனாக இருந்தால், உன் உறவுகளில் உன் அதிகாரத்தையும் மரியாதையையும் இழந்துவிடுவாய். நீ விதைப்பதையே அறுவடை செய்வாய். 2 கொரிந்தியர் 8:21; கலாத்தியர் 6:7; 1 தீமோத்தேயு 1:5.

29. தனிமையானவன் (Loner saint)

ஒரு மெழுகுவர்த்தி மற்றொன்றை ஏற்றுவதால் தன் ஒளியை இழக்காது. ஆனால் தனியே எரியும் ஒரு மரக்கட்டை அதன் நெருப்பை இழக்கலாம். "உன்னைச் சுற்றியுள்ள இருளைச் சபிக்காதே. நூறு சிறு விளக்குகளை ஏற்று." மத் 5:14–16.

30. என் விருப்பில் வாழ்வேன் (Living on my own terms)

நரகத்தின் திகில் அதன் கொழுந்துவிட்டெரியும் நெருப்பல்ல; மாறாக, ஒவ்வொருவரும் தன் சொந்த விருப்பில் வாழும் பல உயிர்களுடனும் மனிதர்களுடனும் நீ கட்டாயமாக என்றென்றும் அங்கு தங்கியிருப்பதே. ஏசா 26:21; 2 தீமோ 3:1–5.

31. உறவுகள், ஒன்றாக வாழ்தல், விவாகரத்து (Trial Dating, Live In, Divorce)

Agape தன்னலமற்ற அன்பு மற்றும் Philio நட்பு அன்பு ஆகியவற்றை அகலமாகவும் ஆழமாகவும் வளர்க்க முடியும், வளர்க்கவும் வேண்டும். ஆனால் பாலினங்களுக்கு இடையேயான தாம்பத்திய (இனப்பெருக்க) அன்பை அதிகரிக்க முடியாது. அது ஒரு பசை நாடா போல அளவில் நிலையானது. பசை நாடா முதன்முதலில் ஒட்டப்படும்போது நிரந்தரமாக ஒட்டிக்கொள்கிறது. அதை உரித்து வேறொரு மேற்பரப்பில் ஒட்டினால், பகுதியாகவே ஒட்டும். மீண்டும் உரித்து மூன்றாவது மேற்பரப்பில் ஒட்டினால், ஒட்டவே ஒட்டாது. பயன்படுத்திய பசை நாடாவை எந்த முட்டாளும் கடையிலிருந்து வாங்க மாட்டான். பயன்படுத்தப்பட்ட துணையுடன் எந்த கணவனும் / மனைவியும் ஒட்ட முடியாது. 1 கொரி 3:16–17; 6:19; 2 தீமோ 2:22; 1 பேது 1:15–16

32. மாறு அல்லது அழி? (Change or Perish?)

"உலகில் நிரந்தரமானது மாற்றம் ஒன்றே" என்று மாறிக்கொண்டிருக்கும் (??) மனிதன் ஆணையிடுகிறான். ஆனால் நிரந்தரமானவற்றைச் சுற்றியே (orbital) மாற்றம் நிகழ்கிறது. மாற்றம் தன் தோற்றத்தையும் மதிப்பையும் பாதையையும் நோக்கத்தையும் நிரந்தரமானவற்றிலிருந்தே பெறுகிறது. "நான் எல்லாவற்றையும் புதிதாக்குகிறேன்" என தேவனால் சொல்ல முடிந்தது, ஏனெனில் "அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்". "நான் இருக்கிறவராகவே இருக்கிறேன்" என்றார். நிரந்தரமானவை தேவனும் அவருடைய நெறிமுறைகளும் (ethics). நீ செய்யும் மாற்றம் பொருள் சார்ந்ததாக (material) மட்டும் இருந்தால், அது சுற்றுவட்டமானதே(orbital). ஆகவே தீங்கு இல்லை (immaterial). நீ செய்யும் மாற்றம் நெறிமுறை சார்ந்ததாக (ethical) இருந்தால், நீ அழிவாய். சங் 90:1–2; மல் 3:6; எபி 13:8

33. நட்பு (Friendship)

இன்று பல இளையோர் ஆயிரம் முகமற்ற நபர்களுடன் ஒரு மைக்ரான் ஆழமான வடிவமற்ற ஆன்லைன் நட்பைத் தேடுகிறார்கள். "லைக்"கள் பகிர்வது வாழ்க்கைப் பகிர்வு அல்ல. ('Likes" sharing is not Life sharing). உன் உண்மையான நண்பன் உன் எல்லா குறைகளையும் அறிந்திருப்பான், மேலும் உன்னைத் திருத்த உறுதியும் நம்பிக்கையும் தைரியமும் கொண்டவனாக இருப்பான் -- ஆனால் இன்ப துன்பங்களில் உன்னுடன் ஒட்டிக்கொண்டிருப்பான். தீர்க்கதரிசி தானியலின் நண்பர்களைப் போல. முதலில் உன் வாழ்வின் மதிப்பீடுகளை (values) பட்டியலிடு. பிறகு அந்த மதிப்பீடுகளின்படி உன் நண்பர்களைத் தேர்ந்தெடு. நீதி 12:20; 25:12; 27:6, 9; 26:6; தானி 2:16–18

34. இனப்பெருக்க வேட்கை (Reproductive Urge)

பெண்ணைவிட ஆணுக்கு சுமார் நாற்பது மடங்கு அதிக இனப்பெருக்க வேட்கை உண்டு. இந்த வேட்கை மிகப் பரிசுத்தமான தேவனால் மிகவும் உன்னதமான பொறுப்புக்காக அளிக்கப்பட்டதே. ஆனால் ஊடகங்கள் ஆணை காமவெறிபிடித்த நாய் போல் சித்தரிக்கின்றன. தாய்மார்களாகவும் சகோதரி களாகவும் மனைவிகளாகவும் உள்ள பெண்களுக்கு, தங்கள் வீட்டிலும் அக்கம் பக்கத்திலும், ஆண்களும் பையன்களும் இந்த தேவன்-அளித்த வேட்கையை மிக உயர்ந்த கண்ணியத்துடனும் புனிதத்துடனும் சந்திக்கவோ கையாளவோ உதவும் மகத்தான வேதப்பூர்வ கடமை உண்டு. இது ஆண்களுக்கு மட்டுமான பிரச்சனையல்ல. உன் கடமையைச் செய். 1 கொரி 7:2–5

35. பாதிக்கப்பட்டவர்களா, குற்றவாளிகளா? (Victims cum villains?)

நாம் அனைவரும் பாதகமான சூழல்களில் பாதிக்கப்பட்டவர்களும் குற்றவாளிகளும்தான். ஆகவேதான் கர்த்தர் நம் மீட்பராகவும் இறுதி நீதிபதியாகவும் இருக்கிறார். "பிரச்சனையின் ஒரு பகுதியாக இருப்பதிலிருந்து தீர்வின் ஒரு பகுதியாக" வளர்ச்சி பெறு. நீதி 11:10–13, 16–17, 21; 28:5; யோனா 1:7–12; 3:4, 10

36. போதைப்பொருள் -- ஆழமான குழி (Drug the deep pit)

மது உன்னை மிருக நிலைக்குத் தள்ளக்கூடும் என்றால், போதைப்பொருள் உன்னை இன்னும் ஆழமாக பேய்த்தன நிலைக்குத் தள்ளும்; ஏனெனில் அது உன் ஆழ்மனதையும் ஆவியையும் பாதிக்கிறது. உன்னை "உயரத்திற்கு" (High) இட்டுச்செல்லும் உன் "நண்பர்கள்", உன் "தாழ்வில்" (Low) உன்னை உதறி விடுவார்கள். அத்தகைய "நண்பர்களுக்கு" எச்சரிக்கையாய் இரு. I கொரி 6:19

37. கருக்கலைப்பு

கருக்கலைப்பு என்பது கொலை. அந்தக் கொலைக்கும், கொலையாளிக்கும் கொலையுண்டவளுக்கும் பயன்படுத்தப்படும் அழகுபடுத்தப்பட்ட லத்தீன் வார்த்தைகளுக் கிடையிலும் (fetus), கொலையே. "தன் "சொந்த" உடலின்மேல் தாய்க்குள்ள உரிமையை நிலைநாட்டுவதாகக் கூறி, லட்சக்கணக்கான மகள்களைக் கொல்வதை எந்த பெண்மை-வாதிகளும் (feminists) ஏற்றுக்கொள்ள முடியாது. தாய்க்கு கொல்லும் உரிமை இருந்தால், தன் "சொந்த" உடலில் வாழும் முழு உரிமை, உருவாகிக்கொண்டிருக்கும்

மகளுக்கும் உண்டு. கொலை தேவனால் தண்டிக்கப்படும். (அரிதான மருத்துவ விதிவிலக்குகளுடன்). யாத் 20:13; வெளி 22:15

38. நெறிமுறை (Legality and morality)

சட்டபூர்வமானது (Legality) எப்போதும் ஒழுக்கம் (Morality) அல்ல. சட்டபூர்வத்தன்மை பெரும்பான்மை வாக்கெடுப்பால் இயற்றப்படுகிறது. ஒழுக்கம் (personal and social ethics) பெரும்பாலும் ஒரு சிறுபான்மை தீர்க்கதரிசிகளால் விழிப்புணர்வு பெற்ற ஒரு தேசத்தின் புனிதமான கூட்டு மனசாட்சியால் தீர்மானிக்கப்படுகிறது. மனித வரலாறு காட்டுவது என்னவெனில், மிகச் சிறந்த நாகரிகங்களைக்கூட சட்டபூர்வத்தன்மை நிலைநிறுத்தவில்லை. ஒழுக்கமே நிலைநிறுத்தியது. தேவன் நம்மை அவருடைய ஒழுக்கத்தின்படி (ethics, morality) நியாயம் தீர்க்கிறார், நம் சட்டபூர்வத்தன்மையின்படி அல்ல. 1 கொரி 1:19–20

39. மிகவும் அனுபவமிக்கவரிடம் கேள் (Blind leading the Deaf)

நீ உன் பட்டப்படிப்புக்குப் பிறகு உன் முதல் வேலையில் நுழையும்போது, முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அங்கு பணிபுரிபவரிடம் வழிகாட்டல் கேட்க வேண்டும் -- உன் வகுப்புத் தோழரிடம் அல்ல. ஒரு அந்நிய நாட்டு காட்டில் வழி தவறினால், அங்குள்ள மூத்த காட்டு மனிதரிடம் திசை கேட்க வேண்டும், உன் சக சுற்றுலாப் பயணியிடம் அல்ல. உன் வாழ்க்கைத் துணையையும், வாழ்க்கைத் திசைகளையும் தேர்ந்தெடுக்க, மிகவும் அனுபவமிக்கவரையே அணுகு, மிகவும் அனுபவ மற்றவரை அல்ல. முட்டாள்தனத்தைத் தவிர். மிகவும் விவேகமாக இரு. 1 கொரி 1:19–20

40. நான் தேவனுக்கு மட்டுமே செவிசாய்க்கிறேன் (Listening only to God?)

தேவன் தம் பூமிக்குரிய பொறுப்புகளில் பெரும்பகுதியை, தெய்வீக அர்ப்பணிக்கப்பட்ட மனித நிறுவனங்களான குடும்ப மூத்தோர், சமூக ஆசிரியர்கள், ஆன்மீக வழிகாட்டிகள் இடம் ஒப்படைத்திருக்கிறார். அவர்களின் சுத்தமான ஆலோசனையைச் செவிசாய்க்காத எந்த இளையவரும் தேவனுக்குச் செவிசாய்க்கவில்லை. இளையவர் முதிர்ச்சியடையும்போது மட்டுமே தேவனால் நேரடியாக வழிநடத்தப்படுவார். யாத் 20:12; நீதி 1:8; 15:22; 23:22; எபி 13:17

41. முணுமுணுப்பு (Murmuring)

இளையவர்களின் இறுதி ஊர்வலங்களில் (funeral of the young) கலந்து கொள். மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவை (ICU) பார்வையிடு. வீடற்ற பிள்ளைகளுக்கு உதவி செய். உன் முணுமுணுப்புகள் ஆவியாகிவிடும். சங் 103:1–18; மத் 8:20; பிலி 2:14–15

42. பொது வாழ்வும் தனி வாழ்வும் (Private and public life)

இன்றைய நெறிமுறை (ethics) மனிதனை இரு வாழ்க்கையாக பிரித்துவிட்டது -- தனிப்பட்டதும் பொதுவானதும். "மனிதன் தன் தனி வாழ்வில் ஒரு (பரிணாம) மிருகமாக நடந்துகொள்ளலாம் (evolutionary beast).` ஏனெனில் அதுவே அவனது உயிரியல் இயல்பு. ஆனால் மனிதன் தன் பொது வாழ்வில் ஒரு புனிதனாக நடந்துகொள்ள வேண்டும்; நேர்மையாகவும் உண்மை யாகவும் கடமையுடனும் சமூக விழிப்புடனும்" இருக்க வேண்டும். ஆனால் இந்த இரட்டைத்தன்மைக்கு மனிதன் அமைக்கப்படவில்லை. தன் மனைவியை ஏமாற்றும் மனிதன் விரைவில் தன் முதலாளியையும்

ஏமாற்றுவான். "காதலன்" வைத்திருக்கும் மனைவி தன் சொந்தப் பிள்ளைகளையும் கணவனையும் கொல்வாள். வழக்கறிஞர்களுடனோ வழக்காடிகளுடனோ பாலியல் "தொடர்பு" வைத்திருக்கும் நீதிபதி தீய தீர்ப்புகளை கொடுப்பான். நெறிமுறைப் புற்றுநோய் (Ethical Cancer) எப்போதும் பரவும் தன்மையுடையது. 2 தீமோ 3:1–5; எபி 12:15

43. உன் கோபத்தை மேலாண்மை செய் (Manage your anger)

முதலில் உன் கோபத்தையும் மனவேதனையையும் உன் மனதிலிருந்து உன் நாட்குறிப்பிற்கு (diary) மாற்று. அப்போது உனக்கு நல்ல தூக்கம் வரும். உன் வழக்கமான வேலைகளைக் கவனி. பல நாட்கள் ஜெபி -- ஒரு பெரிய பிரச்சனைக்கு ஒரு மாதம், ஒரு சிறியதற்கு ஒரு வாரம். உன் நாட்குறிப்பில் எழுதியதை ஒவ்வொரு நாளும் திருத்திக்கொண்டே இரு. அப்போது நீ படிப்படியாக அந்தப் பிரச்சனையைப் பற்றிய உன் புரிதலில் புறநிலை யானவனாகி, தேவனால் உன் தீர்வுத் திட்டத்தில் வழிநடத்தப்படுவாய். வேதனை இன்னும் நீடித்தால், உன் குறையையோ வேதனையையோ கோபத்தையோ - உன் வேலையையோ வாழ்க்கையையோ குடும்பத்தையோ பொறுப்பேற்றிருப்பவரிடம் மாற்று. அவர்களை (தேவனையும்) அந்தப் பிரச்சனையைத் தீர்க்கச் சொல். அவர்கள் செயல்பட போதுமான நேரம் காத்திரு. மன்னி. கைபேசியும் மின்னஞ்சலும் சக்திவாய்ந்த தீ மூட்டுபவைகள் (யாக்கோபு 3:6). நீ கோபமாக இருக்கும்போது அவற்றை முற்றிலும் தவிர். நீதி 12:16; 13:3; 14:29; 15:1, 4; 16:32; 17:9; 19:11; 20:3; 22:24; மத் 5:21–24; 18:15–17, 21–22; எபே 4:26–27; கொலோ 3:13; யாக் 1:19–20; 3:6

44. மன்னித்தல்

"மீண்டும் மீண்டும் தவறு செய்பவன் என் மன்னிப்பை என் பலவீனமாகவும், மேலும் குற்றம் செய்வதற்கான உரிமமாகவும் கருதமாட்டானா?" அந்த வழக்கை முழுவதுமாக கர்த்தருக்கும், உன் குடும்பத்திலோ அலுவல கத்திலோ சபையிலோ சமுதாயத்திலோ பொறுப்பேற்றிருக்கும் வழி காட்டிக்கும் மாற்று. அவர்களை கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கவும் கேள். அவர்களின் தீர்ப்பு உன் முழு எதிர்பார்ப்பின்படியோ, வழியிலோ, நேரத்திலோ இல்லாமல் இருக்கலாம். அதை ஏற்றுக்கொள். மன்னி. எனினும், 'எழுபது எழு முறை மன்னிக்கும் கட்டளை' மன்னிப்பவனுக்கானதே, மன்னிக்கப்படுபவனுக்கானது அல்ல. தேவன் விரைவிலோ பிற்பாடோ ஆனால் முழுமையாகவே செயல்படுவார். மனந்திரும்பும் திறனை, தொடர்ச்சியான, தன்னிச்சையான குற்றங்களால் இழக்கத் தேர்ந்தெடுக்கும் உயிர்களும் மனிதர்களும் சேரும் இறுதி இடமே நரகம். மனித நிறுவனங்களிலிருந்தும், நீதிமன்றங்களிலிருந்தும் தப்பித்த புத்திசாலி குற்றவாளிகள் அனைவரையும் நரகம் தன் பொறியில் அகப்படுத்துகிறது. நீதி 25:21–22; மத் 6:12–14; 18:23–35; மாற் 11:25; லூக் 23:34; யோவா 20:21; அப் 7:60; ரோம 12:17–21

45. கீழ்ப்படிதலே அதிகாரம் (Obedience is Authority)

அதிகாரத்திற்குக் கீழ்ப்படிபவனால் மட்டுமே அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும். இராணுவம் ஒரு நல்ல உதாரணம். தேவனுடைய வார்த்தைக்கு முழுவதுமாகக் கீழ்ப்படியும் மனிதனுக்கு, தீய ஆவிகளும் கீழ்ப்படியும். குடும்பம், சபை, சமுதாயத்தில் தெய்வீகமாக நியமிக்கப்பட்ட மனித அதிகாரத்திற்கு நீ கீழ்படிந்தால் அது தேவனுக்கு கீழ்படிந்ததாகவே கருதப்படும். லூக்கா 7:7–10; ரோமர் 13:1–2; எபேசியர் 6:1–4; யாக்கோபு 4:7

46. விபசாரம்

இனப்பெருக்க எண்ணத்தைத் தூண்டுவது ஒவ்வொரு கணவனுக்கும் / மனைவிக்கும் ஒரு வேதப்பூர்வ கடமையும், உள்ளார்ந்த திறனும் ஆகும். ஆனால் மற்றவரிடம் இனப்பெருக்க எண்ணத்தைத் தூண்டுவது விபசாரமாகும். இந்த விபசாரம், வெளிப்படையான அல்லது ஈர்ப்பூட்டும் ஆடையாலோ, நடத்தையாலோ, வேண்டுமென்றோ, கவனக்குறைவாலோ செய்யப்படுகிறது. விபசாரம் தேவனால் தண்டிக்கப்படும். மத் 5:28–30; 18:6–7; மாற் 9:42; லூக் 17:1; ரோம 14:20–21; 1 கொரி 3:16–17

47. மரணத்திற்கு நுகர்தல் (Consume to Death)

என்ன சாப்பிடுவது, எவ்வளவு சாப்பிடுவது என்பது உன் உடலுக்கு உணவு சக்தியாகுமா, நஞ்சாகுமா என்பதைத் தீர்மானிக்கிறது. வேண்டாத உணவு உட்கொள்ளுதல் மெதுவான மரணத்திற்கு வழிநடத்தும் ஒரு மருத்துவ கோளாறு. கட்டாய ஊடக நுகர்வு தொலைபேசி, தொலைக்காட்சி, இணையம் மூலம் (compulsive media consumption) உன் உயிருக்கு ஆபத்தான ஒரு மனநோய். இப்போதே அதை விட்டு விடு. யோவான் 10:10–11, 14, 27–28

48. உன் பயங்களும் வெட்கங்களும்

தேவனுக்கான பயம் (பயபக்தி) உன் வாழ்வில் மற்ற எல்லா பயங்களையும் அழிக்கிறது. தீமைக்கான வெட்கம் (shame for evil) உன் வாழ்வில் மற்ற எல்லா வெட்கங்களையும் நீக்குகிறது. சங் 4:8; 23:4; 27:1, 5; 28:7; 31:20; 32:7; 34:4; 46:1–6; 91:1–16; 112:6; 113:7; நீதி 1:25; 14:26; 18:10; 19:23; 23:18; 26:2; 28:1; 29:25; ஏசா 8:12–13; 25:4, 8; 26:3, 19; 33:6; 41:10; 43:1–9; 51:12; 54:10–17; 56:3–7; 66:2; எரே 39:17; மத் 8:26; யோவா 14:27

49. அனைவரும் சமமானவர்கள்

தேவனுடைய பிரமிக்கத்தக்க இயல்புகளில் ஒன்று அவரது சமநிலை (சங்கீதம்72:14). அவர் பேரரசனையும் தொழிலாளியையும் சமமாக மதிக்கிறார். அவர்களின் சமூகத் தேவைக்கும் பொறுப்புக்கும் ஏற்ப வெவ்வேறாக வசதியை வழங்குகிறார். தேவனுடைய சமமற்ற பொருள் ஏற்பாடுகளை (material provisions), அவருடைய சமமற்ற அன்பாக நாம் மனிதர்கள் தவறாகக் கருதுகிறோம். பொருள் ஏற்பாடுகள் பூமியில் முடிந்துவிடும். சமநிலை மதிப்புகள் பரலோகில் தொடர்ந்து பூரணமடையும். சங் 72:14; யாத் 22:21–27; 23:2, 7, 9–13; லேவி 19:34; எண் 15:15–16; யோபு 27:13–23; நீதி 17:5; 23:10; ஏசா 1:17; 40:4

50. ஒற்றைப் பாலினத்திலிருந்து பல பாலினம் (Uni sex to many sex)

பெண் தன் எல்லா பொறுப்புகளிலும் ஆணுக்குச் சமமாக மதிக்கப்பட வேண்டும். எனினும் பாலின சமநிலை என்பது பாலின அழிப்பு அல்ல. பாலின அழிப்பு (gender annihilation) ஊக்குவிக்கப்படும் அல்லது சட்டப்படுத்தப்படும் இடங்களில், ஓரினச்சேர்க்கை, பலபாலின உறவு, மற்றும் மிருகங்களுடனான உறவு ஆகியவை வளரத் தொடங்குகின்றன; ஏனெனில் புனிதமான குடும்ப உறவு வெறும் சரீர இணைப்பாகக் (copulation) குறைக்கப்படுகிறது. தன்னாட்சி கொண்ட (autonomous) கணவன் / மனைவியால் ஒருவரையொருவர் நிரப்பும் உறவுகளை உருவாக்க முடியாது, ஆகவே விரைவில் அவர்கள் உறவற்ற உடல் இணைப்புகளுக்கு விலகிச் செல்கிறார்கள். ரோம 1:24–28

51. மெதுவான நஞ்சு (Slow Poison)

நரகத்தின் நன்கு சோதிக்கப்பட்ட விதி "உணரமுடியாத நுண்ணிய மாற்றம்". வாரத்திற்கு ஒரு கரண்டி அதிக மது, மாதத்திற்கு நூறு ரூபாய் அதிக லஞ்சம், ஆண்டுக்கு ஒரு அங்குலம் குறைந்த ஆடையின் நீளம், "மூன்றாவது" நபருக்கு ஒரு தொலைபேசி அழைப்பு -- இவற்றை, உணரக்கூடிய மனங்களும், குரல்களும் “பரிசேயர்கள், மூடவாதிகள், முட்டாள்கள்” என கடுமையாக அவமதிக்கப் படுகிறார்கள். லூக் 16:10

52. கூலிக்கு புன்னகை (Paid smiles)

புன்னகைப்பது இன்று அதிக ஊதியம் பெறும் ஒரு தீவிரமான தொழில். வாணிப வேலை. இந்தக் கூலிப் புன்னகையாளர்களைப் பற்றி அனைவரும் அஞ்சுகிறார்கள். உன் வீட்டிற்குள் கூலியில்லாத புன்னகைகளைத் திரும்பக் கொண்டுவா.

53. தீர்க்கதரிசனங்களே சான்று (Prophesies the proof)

வரவிருந்த உலக மீட்பரைப் பற்றிய பல நூறு (அதில் நாற்பது முக்கிய) மறுக்க முடியாத தீர்க்கதரிசனங்கள், அவர் வருகைக்கு நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்டு, இந்தியா உட்பட ஆசியா முழுவதும் பல பதிவுகளில் கண்டறியப்பட்டுள்ளன. இந்த நாற்பது தீர்க்கதரிசனங்களையும் ஒரு மனிதன் நிறைவேற்ற ஏற்படும் வாய்ப்பு ஒரு டிரில்லியனுக்கு ஒன்று. (vide: Our Gurus on Maha Bali Satguru) ஆதி 3:15; 12:3; 49:10; உபா 18:15; யோபு 19:25; சங் 2:7; 22:1, 16, 18; 40:7; 69:21; பிர 3:14; ஏசா 2:4; 7:14; 9:6–7; 11:1–8; 25:8; 26:19–21; 40:3–5; 42:1–4; 53:1–12; 61:1–3; 65:17; எரே 23:5; தானி 2:36–44; 7:13–27; 9:24–26; 12:1–11; யோவே 2:18; மீகா 4:3; 5:2; ஆகா 2:6; சக 11:12; 12:10; மல் 3:1; 4:5

54. நரகம் கற்பனையல்ல (Hell no fiction)

உலகின் எந்த நாட்டிலும் ஊரிலும் பாஷையிலும், பேய் பிடித்து கதறும் ஆண் / பெண் எவரும் இயேசுவின் நாமத்தினால் விடுதலை அடைகிறார்கள். ஆகவே இயேசு நரகத்தில் மனிதரை வதைப்பவராகவும், பூமியில் அவர்களை விடுவிப்பவராகவும் இருக்க முடியாது. மற்றவர்களின் வேதனையில் மகிழும் தீய உயிர்களின் இருப்பே, நரகத்தில் மனிதர்களின் துன்பத்திற்கு முதன்மைக் காரணம். ஏசா 26:21; மத் 8:29

55. துன்பத்தின் நோக்கம் (Purpose of suffering)

தெய்வீக விசுவாசி ஒரு நெறிமுறைக் காரணத்திற்காக (ethical cause) துன்பப்பட்டாலும், மனித வாழ்வின் இயல்பான பாடுகளை எதிர் கொண்டாலும், அது தேவனுடைய சாயலில் அவனுடைய பொறுமையையும், குணத்தையும் கட்டுகிறது. மேலியல் தெய்வீக தலையீடு நிகழ்ந்தால், அது அவனுடைய விசுவாசத்தைக் கட்டுகிறது. அற்புதங்கள் நிகழவில்லை என்றால், அது அவனுடைய நம்பிக்கையைக் கட்டுகிறது. ஏனெனில் அவன் தன் சமுதாயத்தின் மீட்பைக் காண்பான், அல்லது தன் சந்ததியின் மேல் ஆசீர்வாதத்தைக் காண்பான், அல்லது பரலோகில் பாராட்டைப் பெறுவான். எனினும், மற்றவர்களின் உடல் அல்லது ஆவிக்குரிய கட்டுமானத்திற்காக மிகுதியாக தானாகவே துன்பப்படுவோர் வெகுமதியைக் குறித்து அக்கறை கொள்வதில்லை. அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும், சலியாக்களும் (தூதுவர்கள், மிஷனரிகள்) இந்த வகையைச் சேர்ந்தவர்கள். ஏசா 53:1–12; 59:21; மத் 24:9–12; யோவா 16:33; அப் 9:16; ரோம 5:3–5; 8:16–18, 28; 2 கொரி 1:3–

11; 2:14; 4:1, 7–10, 17–18; பிலி 3:8, 10; எபி 2:18; 11:1–38; 2 பேது 1:17–19;1 யோவான் 3:16

56. நியாயந்தீர்த்தல் (Judgemental)

ஊழியர்களை (staff) மதிப்பிடுவது ஒவ்வொரு மேலாளரின் பொறுப்பு. குற்றவாளியைத் தண்டித்தல் ஒவ்வொரு நீதிபதியின் கடமை. ஒருவருக்கொருவர் பொருத்தமான உறவுகளை உருவாக்க நாம் அனைவரும் மற்றவர்களை மனதளவில் மதிப்பீடு செய்ய வேண்டியிருக்கிறது. எனினும், நீ அதிகாரப்பூர்வமாக அழைக்கப்படாத வரையில், ஒருவரைக் குறித்து வாய்மொழியாகவோ எழுத்துமூலமாகவோ கருத்து தெரிவிப்பது ஒரு கடுமையான குற்றமாகும். ஏனெனில் மனத் தீர்ப்பை மாற்றவோ அழிக்கவோ முடியும். வாய்மொழியான அல்லது எழுத்துமூலமான கருத்தை முடியாது. சேதம் ஏற்பட்டுவிடும். மற்றவர்களின் நற்பெயரைச் சேதப்படுத்தும் உன் வார்த்தை, உன் ஜெபத்தையும் தேவனுடைய மன்னிப்பையும் மிகவும் பாதிக்கும். நீதி10:11,19,21; மத் 7:1–5,12; ரோம14:4,12–13; 1கொரி 4:5; யாக் 3:4–10

57. அற்புதன் (Miracle being)

அற்புதத்தைக் காண்பவன், அற்புதத்தைப் பெறுபவன், அற்புதம் செய்பவன், அற்புதமான (தெய்வீக) மனிதன் -- நீ எந்த நிலையில் இருக்கிறாய்? யூதர்கள் மனித வரலாற்றிலேயே மிகப்பெரிய அற்புதங்களைக் கண்டார்கள். யூதர்கள் மனித வரலாற்றிலேயே மிகப்பெரிய துன்பங்களையும் கண்டார்கள். எவ்வளவு அற்புதங்கள் பெறப்படுகிறதோ, அவ்வளவு அதிக கீழ்ப்படிதலைத் தேவன் கோருகிறார். கீழ்ப்படிதலால் ஒரு அற்புதமான (தெய்வீக) உயிராகு. தீவிர ஜெபத்தால் அற்புதம் செய்பவனாகு. மத் 11:21–24

58. இளம் விசுவாசியின் தோல்வி

ஒரு புதிய விசுவாசியின் முதலாவது அடையாளம், அவனுடைய தற்செயலான தோல்விகளைப் பற்றிய வெளிப்படைத்தன்மையும், வருத்தமும். இரண்டாவது அடையாளம், தோல்விகளின் அளவு குறைதல். அவனது கடந்த வாழ்க்கையையும் தற்போதைய சமூக-நெறிமுறை சூழலையும் பொறுத்து, உடனடியாகவோ மிக மெதுவாகவோ தோல்விகள் குறைதல். அது சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொள்வது போன்றது. மூன்றாவது அடையாளம், தன்னுள்ளும் தன்னைச் சுற்றியும் நீதிக்கான (ethics) அவனது ஆவல். அவன் ஒரு குணமடைந்துவரும் நோயாளி, ஆனால் வெள்ளை கோட்டுடன்(recovering patient with a white coat on). இளம் பலவீனமானவனாக இருந்தும், அவன் உருவாகிக்கொண்டிருக்கும் தேவ மகன். நீதி 24:16–20; மத் 5:6

59. இணைதல், டேட்டிங், திருமணம் (Mating, dating, marriage)

தெய்வீக ஒளி ஏற்படாத பல சமுதாயங்களில் (மத்திய இந்திய பழங்குடியினரிலிருந்து தென்மேற்கு சீன பழங்குடியினர், ஸ்காண்டிநேவிய பழங்குடியினர், மத்திய ஆப்பிரிக்க பழங்குடியினர் வரை) இணைதல் (mating) திருமணத்திற்கு முன் நடந்தது. திருமணத்திற்கு முன் இரு தரப்பினரின் கருவளத்தை உறுதிசெய்ய இது அன்று அவசியமாகக் கருதப்பட்டது. இந்த சமுதாயங்களில் தெய்வீக ஒளி விடிந்தபோது, இணைதல் டேட்டிங்கிற்குக் (dating) குறைக்கப்பட்டது. இன்றைய டிஜிட்டல் தொடர்பு மூலம், டி.என்.ஏ முதல் கருவளம் வரை, உளவியல் அளவீடு முதல் இணக்கம் (compatibility) வரை,

வாழ்க்கை வரலாறு முதல் வாழ்க்கை இலக்குகள் வரை, தன் வருங்கால துணையைப் பற்றிய கிட்டத்தட்ட தேவையான அனைத்து தகவலையும் பெற முடியும். ஆகவே சில வாரங்களுக்கு மேல் நீடித்த டேட்டிங் தேவை நீக்கப்பட்டுள்ளது. உணர்ச்சி பொழுதுபோக்கிற்காக நீடித்த டேட்டிங் செய்வது ஒழுக்கச் சீரழிவிற்கு இட்டுச் செல்கிறது. நவீனத்துவத்தின் போர்வையில் திரும்பி வரும் பழமையான காட்டு பழக்கங்களைத் தவிர்.

60. பரிணாமமா? படைப்பா? (Evolution or Creation)

சார்லஸ் டார்வினுக்குப் பின் நூறு ஆண்டுகள் கழித்தும், (இடைநிலை புதைபடிவங்களான) கோடிக்கணக்கான இணைப்புகள்(missing link fossils) இன்னும் காணப்படவில்லை. இதனால், இயற்கை பரிணாமம் (natural evolution), படைப்பைவிட (creation) அதிக நம்பிக்கையைக் கோருகிறது. அறிவியல் அனுமானம், தற்போதைய ஆராய்ச்சி கருவிகளின் தரத்தையும் அணுகக்கூடிய ஆராய்ச்சி பொருள் விரிவையும் பொறுத்தது. ஆகவே இறுதி வார்த்தை இன்னும் வரவேண்டியுள்ளது. அறிவியலே பரிணாமத்தின் (science under evolution) கீழ் இருந்தால், "இறுதியான அறிவியல் வார்த்தை" (final scientific word) என ஒன்று இல்லை.

61. தெய்வங்களின் பரிணாமம் (Evaluation of gods)

மிகப் பிரபலமான மானிடவியல் கருதுகோளுக்கு (concepts) மாறாக, கடந்த நூறு ஆண்டுகளில் உலகெங்கும் கண்டறியப்பட்டு ஆவணப் படுத்தப்பட்டதாவது: மேலான ஒரே தெய்வவாதமே (வான தேவன்) பலதெய்வவாதமாகவும் எல்லாம்-தெய்வவாதமாகவும் சீரழிந்தது. பலதெய்வவாதமும் எல்லாம் -தெய்வவாதமும் ஒரு உன்னதமான, கருணையுள்ள, நெறிமுறையான, பேசும் தேவன் என்ற கருத்தாக "வளரவில்லை" (evolve). அந்த நெறிமுறையான (ethical) பேச்சிலிருந்து விடுபட, மனிதன் ஊமை சிலைகளையும் குறியீடுகளையும் சடங்குகளையும் உருவாக்கினான். ஆகவேதான், ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் மனித தொடர்பு கருவிகள் (வாய்மொழியிலிருந்து டிஜிட்டல் வரை, முரசுகளிலிருந்து செயற்கைக்கோள்கள் வரை) பெருகியிருந்தும், சரியான தெய்வீக தகவலும், அறிவுறுத்தலும் மனித அலட்சியத்தாலோ, சூழ்ச்சியலோ குறைந்துவிட்டது; ஏனெனில் சரியான தெய்வீக தகவலும் (divine information) அறிவுறுத்தலும் (instruction) நெறிமுறைக் கீழ்ப்படிதலைக் (ethical obedience) கோருகின்றன. ரோம 1:22

62. இனவெறியும் சாதிவெறியும் (Racism and Casteism)

மானிடவியல் ஆதாரங்கள் காட்டுவது என்னவெனில், சுவிசேஷமும், எழுத்தறிவும் (பெரும்பாலும் உள்ளூர் மொழியில் பரிசுத்த வேதத்தின் மொழிபெயர்ப்பைத் தொடர்ந்தே வருபவை) எந்த ஒரு பழமையான நாகரிகத்தையும் மூன்று தலைமுறைகளுக்குள் டிஜிட்டல் நாகரிகத்திற்கு உயர்த்துகின்றன. தாழ்வு அறிவின்மையால் அல்ல. வாய்ப்பின்மையால். நாகாலாந்தின் தலைவேட்டைக்காரர்கள் முதல் அந்தமானின் காரென் இனத்தவர், கேரளாவின் புலையர், தமிழ்நாட்டின் இருளர், பீகாரின் மால்தோ, குஜராத்தின் பில் இனத்தவர், இந்தியா முழுவதும் உள்ள தலித் அடிமைகள் வரை, இதை நாம் நேரடியாகக் கண்டிருக்கிறோம். இது எல்லா தேசங்களிலும் நிகழ்கிறது. தேவன் எல்லா சமுதாயங்களையும் திறனில் சமமாகப்

படைக்கிறார். இனவெறியர்கள் மற்றவர்களின் திறனை அடக்குகிறார்கள். அப் 17:26; கலா 3:28

63. இன மேன்மை (Racial supremacy?)

நிறமும், மண்டை ஓட்டு அளவும், நரம்பு நிலையும் எந்த இனத்தின் கூட்டு அறிவுத் திறனுடனும் (collective intelligence level) தொடர்பில்லை என்பதை மானிடவியல் நிலை நாட்டியுள்ளது. இன்னும் தங்களுக்கு உள்ளார்ந்த மேலான மூளை உண்டு என்று உரிமை கொண்டாடும் எந்த இனவெறியனும், சாதிவெறியனும் தன் சொந்த கூற்றை மிக வெற்றிகரமாக அழிப்பவனே. லூக் 7:1–10; கொலோ 3:11

64. ஆண் / பெண் நண்பர்கள் (Boy / Girl friend)

இருபாலின "நட்பு" என்பது நவீனத்துவத்தின் போர்வையில் இறக்குமதி செய்யப்பட்ட குப்பை. இருபாலின வகுப்புத் தோழர்கள், அணி தோழர்கள், வேலைத் தோழர்கள் நல்லது. ஆனால் நண்பர்கள் ஒரே பாலினத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். இருபாலின நட்பு, இணைதலுக்கு (mating) முந்தைய ஈர்ப்பு. நெறிமுறையுள்ள இளையோரைத் தவிர எல்லா மிருகங்களும் (mammals) இந்த ஈர்ப்பில் ஈடுபடுகின்றன. அறிவொளி பெற்றவர்கள், சக இளையோர் அழுத்தத் தினாலோ, தன் கர்வத்தினாலோ, தன் சொந்த கவர்ச்சியைச் சோதிக்க இந்த பொழுதுபோக்கில் ஈடுபடுவதில்லை. உள்ளடக்கம் மிக்க இளையோர் மற்ற உயிர்களின் பாதிப்பில் இத்தகைய நடைமுறைகளில் ஈடுபடுவதில்லை. சங் 119:9, 34, 105; 139:1–24

65. வரலாறு படை (Make history)

தெய்வீக வரலாற்றைப் படி. மிஷன் வரலாற்றைப் படி. தேசிய வரலாற்றைப் படி. அப்போது நீ வரலாறு படைப்பாய். இரண்டாவதாக, மேற்கண்ட வரலாறுகளைப் படிப்பது, எலியாவைப் போல நம் முன்னோர்கள் செய்ததைவிட பெரியதொன்றும் நாம் சாதிக்கவில்லை என்பதை உணர்த்தி நம்மைத் தாழ்மைப்படுத்துகிறது. நியா 6:13; 1 ராஜா 19:4; தானி 9:2

66. உன் கல்வெட்டு (Write your epitaph)

ஒரு வருடம் ஜெபித்து, ஒரு லட்சம் பேரால், நூறு ஆண்டுகளுக்கு, எதற்காக நீ நினைவுகூரப்பட விரும்புகிறாய் என்பதை, வேதப்பூர்வமான நூறு வார்த்தை களுக்குள் எழுது. அதுவே உன் வாழ்க்கையின் தரிசனமும் நோக்கமும் (vision and mission). அதை வாழத் தொடங்கு. விலகாதே.

67. யாருடைய விசுவாசம் முக்கியம்? (Whose faith matters)

இறுதியில் முக்கியமானது, ஒரு மனிதன் தேவனை எவ்வளவு நம்புகிறான் என்பதல்ல, தேவன் அந்த மனிதனை எவ்வளவு நம்புகிறார் என்பதே. யோவா 2:24

68. கூட்டு விசுவாசம் (Collective faith)

நம்பிக்கையும் கீழ்ப்படிதலும் எனப் பொருள்படும் விசுவாசம், தனிநபருக் கானதாகவும் ஒரு குடும்பம், சபை, சமுதாயம் போன்ற கூட்டுக்குமானதாகவும் இருக்க முடியும். இவை தெய்வீகமாக நியமிக்கப்பட்ட மனித நிறுவனங்கள். இதில் ஒரு பக்தனின் கீழ்ப்படிதல், மற்றொரு மனிதனின் தேவைக்கு உதவுகின்றது. தேவனுடைய பதிலை வளர்க்கின்றது. நான் இன்று இருப்பது

நூறு பக்தர்கள் தேவனுக்கு கீழ்ப்படிதலால்தான். மாற் 2:1–5; லூக் 7:4–10; ரோம 5:19

69. பிரபலமாக ஆவதா? (Become a celebrity?)

பொழுதுபோக்குத் தொழிலின் (entertainment industry) பிரபலங்கள் தன் தனி வாழ்வையோ தன் உடலையோ பெரும் தொகைக்கு வெகுஜன ஊடகங்களுக்கு விற்கிறார்கள். அவர்கள் மில்லியன் கணக்கானவரை மகிழ்விக்கும் திறமையுடையவர்கள், தங்களைத் தவிர. ஆகவே அவர்களில் பலர் தற்கொலையில் முடிகிறார்கள். மற்றவர்கள், சமுதாயத்தை மாசுபடுத்தியதற்காக தேவனுடைய கடுமையான நியாயத்தீர்ப்பில் முடிகிறார்கள். அதற்குப் பதிலாக நீ ஒரு தீர்க்கதரிசியாக மாறலாம். வெளி 19:1–4

70. காரசாரமான பிரச்சனைகள் (Spicy problems)

பெரும்பாலான மக்கள் தங்கள் சொந்த, மற்றும் மற்றவர்களின் பிரச்சனைகளைப் பேசுவதை மிகவும் ரசிக்கிறார்கள். அதனால் தீர்வுகளை வெறுப்பதாகவும் (hate solutions) தெரிகிறது. தீர்வுகளைக் கண்டுபிடிப்பதை ரசி. நீதி 26:17–20; மத் 5:11

71. பரிணாமவாதம் நெறிமுறையற்றது (Evolutionism is amoralism)

இயற்கை பரிணாமவாதி ஒரு நெறிமுறையற்றவன். நெறிமுறை அவனுடைய தேடல் அல்ல. நெறிமுறை (ethics) , நுண்ணோக்கிக்கும் (microscope and telescope) தொலைநோக்கிக்கும் வெளியே உள்ளது. ஏனெனில் காலமும் இடமும் பொருளும் ஆற்றலும் (time, space, matter, energy) எந்த நெறிமுறையையும் கொண்டிருக்க வில்லை. ஆகவேதான் இன்று பல விஞ்ஞானிகள் நாத்திகர் அல்லாவிட்டாலும் கடவுளைப் பற்றி அஞ்ஞானிகளாக (agnostics) இருக்கிறார்கள். ஆனால் தன் சொந்த பிழைப்பிற்கே (existance) விஞ்ஞானிக்கு நெறிமுறையும் (ethics) உறவுகளும் (relationship) தேவை. வெளி 19:1–4

72. தற்கொலை

நீ உனக்காக மட்டும் வாழும்போதும், இன்பமே (உறவோ, சமாதானமோ, ஆனந்தமோ அல்ல) உன் வாழ்க்கை இலக்காக இருக்கும்போதும், தற்கொலை அதிக வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது. அந்த இன்பம் வேதனையாக மாறும்போது, வாழ்வதற்கான உன் நோக்கத்தை இழக்கிறாய். நீ வாழ்க்கையை முடிக்க விரும்புகிறாய். யாருக்கும் அது பற்றி அக்கறையில்லை. ஆனால் மற்றவர்களுக்காக வாழ்பவர்கள் அதிக காலமோ, மகிழ்ச்சியாகவோ வாழ்கிறார்கள், ஏனெனில் மற்றவர்கள், அவர்கள் நீண்டகாலம் வாழ விரும்புகிறார்கள். என்றென்றும் இருக்கும் தேவனும் அதையே விரும்புகிறார். விட்டுவிடாதே. தேவனிடம் உனக்காக ஒரு உன்னதமான திட்டம் உண்டு. சங் 34:17–19; ஏசா 49:15; 55:8–9; ரோம 8:34; 10:11; 2 கொரி 4:17; 7:10; பிலி 4:4–7, 19; எபி 4:15–16; 1 பேது 4:7; யூதா 24–25

73. தந்தையா எதிரியா (Father or Foe)

(பரலோகத்தில் மற்றும் பூமியில்) உள்ள தந்தை உன்னைத் திருத்துகிறார், மன்னிக்கிறார், மீட்டெடுக்கிறார். ஆனால் ஒருபோதும் உன்னை கைவிட மாட்டார். சாத்தான் சோதிக்கிறான், சிக்க வைக்கிறான், விழச்செய்கிறான்,

பின் உன்னைக் குற்றம்சாட்டி நிராகரிக்கிறான். நீ யாருக்குச் செவி சாய்க்கிறாய் என்பதில் எச்சரிக்கையாய் இரு. யாத் 19:3; 20:12; லேவி 19:1; சங் 32:8; யோவா 10:10–14, 27–30

74. "சராசரி" என்பது "சாதாரணம்" அல்ல (Normal vs Average)

"ஒரு மருத்துவமனையில் உள்ள அனைவரின் உடல் வெப்பநிலையின் சராசரி (average), சாதாரண (normal) உடல் வெப்பநிலையை விட அதிகமாக இருக்கிறது". தேவனுடைய மகனுக்கு / மகளுக்கான நடத்தை (normal) தரம் தேவனால் நிர்ணயிக்கப் படுகிறது, அவளைச்/அவனைச் சுற்றியுள்ள கூட்டத்தின் "சராசரி" (average) நடத்தையால் அல்ல. உன் "சாதாரணத்தை" (normal) கண்டு பரிகாசக்காரர்கள் உன்னைப் பரிகசிக்கக்கூடும். ஆனால் "பல நாய்கள் குரைக்கின்றன என்பதற்காக சூரியன் தன் வானத்தின் பாதையை மாற்றுவதில்லை." ஆதி 39:11–20; 1 தீமோ 4:12; 1 பேது 4:14

75. நுகர்வோரும் விற்பவர்களும் (Consumers and Vendors)

இன்று மனிதர்கள் இரண்டு வகைகளாக மட்டுமே குறைக்கப்பட்டுள்ளனர்--நுகர்வோரும் விற்பவர்களும். மிகச் சொற்பமான உறவுகளே (relations) உள்ளன, பெரும்பாலும் ஒப்பந்தங்களே (contracts). கணவனுக்கும் (பாலியல் நுகர்வோர்) மனைவிக்கும் (பாலியல் விற்பவர்) இடையேயும், தேவனுக்கும் (சரக்கு விற்பவர்) மனிதனுக்கும் (சரக்கு நுகர்வோர்) இடையேயும் இருப்பதுபோல். எப்போது வேண்டுமானாலும் எந்தக் காரணத்திற்காகவும் ரத்து செய்யக்கூடிய ஒப்பந்தங்கள். உறவுகளை மீட்டெடு. நுகர்வோர்வாதத்தை (consumerism) வெளியேற்று. மல்கியா 4:5–6

76. யாருக்கு வழிபாடு தேவை? (Who need worship?)

வழிபாடு என்பது தேவனுடைய உன்னதமான குணத்தைப் பற்றிய ஆழ்ந்த விழிப்புணர்வுக்குள் செல்வது. வழிபாட்டின்போது தேவனுடைய நெறிமுறை (ethics) நம் உதடுகளிலிருந்து நம் வாழ்விற்குள் பாய வேண்டும். இதுவே உண்மையான வழிபாட்டின் சான்று. இரண்டாவதாக, வழிபாட்டில் தேவனுடைய உன்னத குணத்தை உச்சரிப்பது, தேவனுடைய நெறிமுறைக்கு எதிரானவையான பேய்களை வேதனைப்படுத்தி அச்சுறுத்துகிறது. ஆகவே வழிபாட்டின்போது, பேய்த்தன அழுத்தம், சாபங்கள், அடிமைத்தனம், உடலிலோ ஆவியிலோ மனதிலோ உள்ள துன்பம் விலகுகின்றன. தேவன் உன்னதத்தின் எல்லை. தேவனுடைய பொருள்சார் (material) தயவைப் பெற வேண்டுமென்று புகழ்ச்சி சொல்லும் முகஸ்துதியாளர்களால் அவரை இன்னும் உயர்த்த முடியாது. கீழ்ப்படிதல் தயவைக் கொண்டுவரும். ஒவ்வொரு தந்தையும் விரும்புவதுபோல், நம் பரலோகத் தந்தையும் தம் பிள்ளைகளின் அன்பான வார்த்தைகளை விரும்புகிறார். ஆனால் தேவன் மனித வழிபாட்டைச் சார்ந்திருக்கவில்லை; மாறாக மனிதனுக்கே தேவ வழிபாடு தேவை. யோவா 4:23–25

77. ஒரு மந்திரவாதியாக மாறு

மக்களை ஈர்க்கும் மந்திரவாதம் செய்ய, பின்வரும் பழமையான மந்திர வார்த்தைகளைப் பயன்படுத்து: 'நன்றி' 'அருமை' 'நல்லது' 'தயவுசெய்து' 'எனக்கு ஆலோசனை தேவை' 'எனக்கு நீ தேவை' 'மதிப்புமிக்கது' 'சிறந்தது' 'நான் தவறு செய்துவிட்டேன்' 'நான் முயற்சி செய்கிறேன்' 'மன்னிக்கவும்'

'பரவாயில்லை' 'நீ அருமையானவன்' 'தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக' 'தேவன் உன்னை நேசிக்கிறார்'. நீதி 10:11; 16:21–24; 25:15

78. நரகம் ஏன் தேவை? (Why Judgement?)

நெறிமுறை(ethics) தத்துவமல்ல (philisophy). நெறிமுறை, செயலையும்(action) அதன் விளைவையும் (reaction) அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொரு தேசத்திற்கும் அதன் சட்டக் குறியீடும் (legal code), விளையும் தண்டனைக் (penal code) குறியீடும் உண்டு. தத்துவப் போஸ்டர்கள் (philosophic wall posters) மட்டுமே இருந்து, சிறைகள் இல்லாத தேசத்தில் நீ ஒரே ஒரு இரவும் தங்கமாட்டாய். தேவன் தன்னை இறுதி நீதிபதி என்று அழைக்கிறார், சாண்டாக்ளாஸ் என்று அல்ல. மீட்பர் மன்னிக்கிறார், ஆனால் குற்றத்தை ஏற்றுக்கொள்பவர்களுக்கு (approver) மட்டுமே, அதுவும் கீழ்ப்படிதலும் மனந்திரும்புதலும் நிபந்தனையாக. மற்ற அனைவரும் தங்கள் விகிதாசார தண்டனைகளைச் சந்திப்பார்கள். இது இயற்பியலும், சமூகவியலும், சட்டவியலும், பிரபஞ்சவியலும் ஆகும். ஏசா 26:21; வெளி 22:12

79. தாழ்மையாக ஆனால் மகிமையுடன் இரு

தேவன் முன்னிலையில் முற்றிலும் தாழ்மையாக இரு. பக்தி காட்டு. நீ ஆனது அனைத்தும், உன்னிடம் உள்ளது அனைத்தும் தேவனுக்குரியது. தேவனுடைய பிள்ளைகள் முன்னிலையில் முழுமையான சமநிலை காட்டு. அனைவரையும் சமமாக நடத்து. ஒருவருக்கொருவர் பாதம் கழுவு. ஆனால் பேய்கள் (தீய ஆவிகள்) முன்னிலையில், தேவனுடைய மகனாக மகிமையுடனும் மிக துணிச்சலுடனும் இரு, மேலும் கர்த்தருடைய பெயரால் பேய்கள் உனக்குக் கீழ்ப்படியக் கட்டளையிடு. அவை கீழ்ப்படியும். (ஆனால் இதை உன் இதயத்தைச் சுத்திகரித்த பின்பே செய்.) இந்த நடத்தை வரிசையை ஒருபோதும் குழப்பாதே. சங் 103:1–22; ஏசா 66:2; மத் 5:5; 10:8; 18:1–4; மாற் 7:28–30; லூக் 10:17; யோவா 13:1–5, 12–15, 34–35; ரோம 12:10; 1 தெச 4:9; எபி 13:1

80. 'பரிசுத்த' யுத்தங்களா? (Holy Wars???)

பழங்காலத்தில் இன்று நமக்குள்ள ஐக்கிய நாடுகள் போன்ற தேச கூட்டமைப்புகள் இல்லை. ஆகவே, அயலவரைத் துன்புறுத்தும் அயோக்கிய தேசங்களைத் தடுக்கவும், இனப் படுகொலை செய்யும் கொடுங்கோலர்களைத் தடுக்கவும், கட்டுப்பாடற்ற தீச்செயலைச் செய்யும் மக்களைத் தடுக்கவும், தேவன் ஒரு தேசத்தையோ மக்களையோ தண்டிக்கப் மற்றொரு தேசத்தையோ மக்களையோ பயன்படுத்தினார். ஆனால் யூதர்கள் அதை தவறாக விளங்கிக்கொண்டனர். தங்கள் நெறிமுறை (ethics), தனிப்பட்ட மற்றும் சமூகத்தன்மை எப்படியிருந்தாலும், தேவன் எப்போதும் தங்கள் பக்கம் இருக்கிறார் என்றும், தாங்கள் கர்த்தருடைய செல்லப் பிள்ளைகளும், நிரந்தர படைகளும் என்றும் அவர்கள் கருதினர். (தேவன் யூதர்களுக்கு ஒரு அரசனையோ அரசையோ, எந்த யுத்தத்தையோ விரும்பவில்லை. தாவீது ராஜா "அதிக இரத்தம் சிந்தினான்" என்பதால் தேவன் தம் ஆலயத்தைக் கட்ட தாவீதை அனுமதிக்கவில்லை.) யூதர்கள் தங்கள் தவறான புரிதலுக்குப் பெரும் விலை கொடுத்தனர். ஆபிரகாமிய நெறிமுறை உடன்படிக்கையைக் (Abrahamic ethical covenant) காப்பாற்றும் தேவன், ஆதாமிய நோவாகிய நெறிமுறை உடன்படிக்கைகளுக்கு (Adamic, Noahic ethical covenants) எதிராக நடப்பவர் அல்ல. அனைத்து மனிதர்களின் தேவன் இனவெறியராக (racist) இருக்க முடியாது. மனிதர்கள், மனித இரத்தத்தை சிந்தக்கூடாது

என்பதற்காகவே சமாதானத்தின் அதிபதி தன் இரத்தத்தைச் சிந்தினார். ஆதி1:28–31; 9:9–17; 15:16; சங் 46:9; ஏசா 2:2–4; 9:6–7; 19:24–25; மத் 26:52; லூக் 2:14; யோவா 18:36

81. அடிமை (Slavery)

அடிமைத்தனம், மனிதருக்கான தேவனுடைய திட்டத்தின் பகுதியல்ல. அது பலதார மணத்தையும், யுத்தத்தையும் போல, தேவனுடைய பொறுத்துக்கொள்ளும் அனுமதியாக (tolerant will) இருந்தது. மோசேயின் சட்டம் அந்தக் கொடிய காலங்களின் மிக மனிதாபிமானமற்ற நடத்தை யிலிருந்து அடிமைகளைக் காத்தது. உலக வரலாற்றில் இந்தியாவில்தான் மிக அதிக எண்ணிக்கையிலான அடிமைகள் (Dalit slaves) நீண்ட காலம் இருந்தனர். இன்னும் இருக்கின்றனர். பிரிட்டனில் வில்பர்ஃபோர்ஸ் மூலமும், இந்தியாவில் கேரி மூலமும், அமெரிக்காவில் லிங்கன் மூலமும் அடிமைகளை சட்டப்பூர்வமாக விடுவித்தது தெய்வீக ஒளியே. இந்தியாவில் குழந்தை பாலியல் அடிமைத்தனத்திற்கு (child sex slavery) எதிராக முதலில் போராடியவர்கள் பேசெல் மிஷனும், ஏமி கார்மைக்கலும். இன்னும் இந்தியாவில் இருபத்தைந்து லட்சம் பெண் பாலியல் அடிமைகள் (தேவதாசிகள்) உள்ளனர். அவர்களை விடுவி. நீதி 31:8–9

82. வாழ பதிலளி (Respond to live)

உன் குழந்தை தீவிர சிகிச்சைப் பிரிவில், கோமா (ICU, coma) நிலையில் இருக்கும்போது, அறுவை சிகிச்சை நிபுணரிடமிருந்து (surgeon) நீ கேட்க விரும்பும் சிறந்த வார்த்தை "அவள் பதிலளிக்கிறாள்" (she responds) என்பதே. நீ பதிலளிக்கிறாயா? (are you responding?) அப்போது நீ வாழ்வாய், உன் வாழ்க்கை இன்று எவ்வளவு குழப்பமாக இருந்தாலும். தேவனுக்கும், அவருடைய வார்த்தைக்கும், வழிகாட்டிகளுக்கும், மூத்தோருக்கும் பதிலளி. நீ வாழ்வாய். எரே 36:25–27; 37:1–10; மாற் 9:7

83. பெண்மை-அழிப்புவாதிகள் (FEMINIHILISTS)

பெண்ணியவாதிகள்(Feminists), கடந்த அரை நூற்றாண்டில், குரலற்ற, அதிகாரமற்ற, அடக்கப்பட்ட பெண்களின் விடுதலைக்கு மிகவும் சேவை செய்துள்ளனர். ஆனால் பெண்மை-அழிப்புவாதிகள் (Feminihilists) பெண்ணை அழிப்பதற்காக செயல்படுகிறார்கள். அவர்களுக்கு "பாலினம் (gender) என்பது ஆணாதிக்க மூளையின் தந்திரமான படைப்பு; இனப்பெருக்கப் பொறுப்பு (reproductive responsibility) என்பது மரண பொறி; ஒற்றைப்பாலினமே (mono gender) வரவிருக்கும் சொர்கம். ஆணின் 'பெண் பாலினம்' என்ற செயற்கை படைப்பை அழிக்காமல் பெண்ணின் அடிமைத்தனத்தை அகற்ற முடியாது."

84. தேவன் சமன்படுத்துபவர் (God the leveller)

பழைய உடன்படிக்கையின் கீழ், ஏழாம் ஆண்டில் கடன்களை விடுவிப்பதும், ஐம்பதாம் (யூபிலி) ஆண்டில் நிலங்களை மீட்பதும், மிகப்பெரிய பொருளாதார சமன்படுத்திகளாக இருந்தன. புதிய உடன்படிக்கையின் கீழ், நம் சேமிப்பிலும் சொத்திலும் பாதி ஏழைகளுக்கு, குறிப்பாக ஏழை விசுவாசிகளுக்கு உரியது. இன்று ஆறு கோடீஸ்வரரின் சொத்து உலகின் பாதி மக்களின் சொத்தை விட அதிகம். இது பொருளாதார உடைமை அல்ல; உலகின் பொருளாதார அமைப்பின் பேய்த்தன ஆக்கிரமிப்பு. ஒரு சமன்படுத்துபவனாக இரு.

குரலற்றவர்களுக்குக் குரலாக இரு. செல்வந்தரான போதகர்களே எச்சரிக்கை. லேவி 25:8–10, 25–28, 39–41; உபா 15:1–15; நீதி 24:11–12; 31:8–9; ஏசா 1:17; 59:6–12; மத் 19:16–26; லூக் 3:10–11; 18:8–9; அப் 2:44–45; 4:32–35; ரோம 12:13; கலா 2:10; 1 தீமோ 6:17; யாக் 2:14–22

85. உன் ஆவிக்குரிய மாற்றம் (Spiritual transformation)

(நம்பிக்கையும் கீழ்ப்படிதலும் என்ற படிகள்) ஐந்து விநாடிகளிலோ ஐந்து ஆண்டுகளிலோ நிகழலாம். அந்த மாற்றத்தின் காலமோ முறையோ தேவனுக்கு முக்கியமல்ல. அது மிக மெதுவாக நடந்தால், பல ஏற்ற இறக்கங்கள் இருந்தால் விட்டுவிடாதே. உடனடியான, மென்மையான, நேர்கோட்டு, அற்புதமான, குமிழியிடும், கவர்ச்சியான மாற்றம் என்பது சில பிரசங்கிமாரின் சந்தைப்படுத்தும் (marketing) கதையாக இருக்கலாம். மத் 12:20; பிலி 1:6

86. நான் தேவனைப் பேசக் கேட்க முடியுமா? (Can God speak to me?)

ஆம். எல்லா உயிரினங்களும் தொடர்பு கொள்கின்றன. எல்லா உயிரினங்களையும் படைத்த தேவன் நிச்சயமாக தொடர்பு கொள்கிறார் -- சமிக்ஞைகள், உள் குரல், பரிசுத்த வேதம், கனவுகள், தரிசனங்கள், தீர்க்கதரிசனம், சூழ்நிலைகள், இன்னும் கேட்கக்கூடிய குரல் மூலமும். எப்படி என்பது காரணி அல்ல, என்ன என்பதே காரணி. தேவனுடைய தொடர்பைக் கேட்பதற்கான முதன்மை நிபந்தனை நேர்மையே. முகமூடி அணிந்தவர்கள் தேவனுடைய சமிக்ஞைகளைக் கேட்பதில்லை. பரபரப்பானவர்களும் அவரைக் கேட்பதில்லை. ஊடகங்களுக்கும் அதன் சந்தைக்கும் கட்டப்பட்ட காதுகளும் மூளையும் தேவனைக் கேட்பதில்லை. நீ வயதிலோ விசுவாசத்திலோ மிகவும் இளையவனாக இருந்தால், தேவனைக் கேட்க, தேவனைக் கேட்கும் வழிகாட்டி (mentor) சொல்லைக் கேள். வயதிலும் கீழ்ப்படிதலிலும் நீ வளரும்போது, தேவசெய்தியை நேரடியாகவே கேட்பாய். 1 சாமு 3:10

87. கூட்டு தீமை (Collective sin)

கருக்கலைப்பு, விவாகரத்து, வரதட்சணை, அடிமைத்தனம், சாதி ஒடுக்குமுறை, தீண்டாமை, இனவெறி, பலவீனரைச் சுரண்டுதல், அநீதியான யுத்தம், இனப்படுகொலை என்பது குடும்பமோ சமுதாயமோ தேசமோ செய்யும் கூட்டுத்தீமை (collective sin). மனந்திரும்புதலும் திருத்தமும் செய்யப்படாவிட்டால், இந்தக் குற்றங்கள் பல, நம் மேலோ நம் சந்ததியின் மேலோ கூட்டு சாபத்தில் முடியலாம். ஒரு தனிநபரால் தன் குடும்பம் அல்லது முழு சமுதாயத்திற்காகப் போதுமான அளவு திருத்தமோ, மீட்பதோ செய்ய முடியாத போது, ஒப்புக்கொள்ளுதலும், வெளி அறிக்கையும் விடுதலையைத் தருகின்றன. தேவனே சமூக நீதியின் மூலமும்(orgin) காவலரும்(protector). சங் 82:3–4; நீதி 14:31; 29:7; 31:8–9; ஏசா 1:17; 19:24; தானி 9:20

88. பண்பாடு (Culture)

மூளையுள்ள ஆண்கள் அதை ஹெல்மெட்டால் காக்கிறார்கள். மதிப்புகளுள்ள (values) பெண்கள் அதை பண்பாட்டால் (culture) காக்கிறார்கள். 1 கொரி 6:19–20; 10:23–24, 31–33

89. பாலின தனி இடம் (Gender privacy)

எல்லா இனங்களிலும், பாலின தனி இடத்தை (gender privacy) பாலினங்களின் நெருக்கத்திற்குள் (bigender proximity) அடைப்பது உடலுறவில் முடிகிறது என்பதை ஒவ்வொரு உயிரியலாளரும் அறிவார். இதை உயிரியலாளர்கள் "உடலுறவு அழைப்பு" (Mating call) என்கின்றனர். பெண்மை-அழிப்புவாதிகளால் (FEMINIHILISTS) பாலின சமநிலை என்ற பெயரில் பாலினங்களுக்கிடையேயான இந்த தனி இடம் கட்டாயமாக நீக்கப்படும் இடங்களில் பாலியல் கட்டுப்பாடின்மை அதிகரிக்கும். ஏற்படும் பாலியல் பாதிப்பிற்கு ஆணை முழுவதுமாகக் குற்றம்சாட்ட முடியாது. ஏனெனில், அத்தகைய கட்டாய நெருக்கத்தால் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்படுபவன் ஆண். ஏனெனில் ஆணுக்கு அது ஒரு கட்டாய அழைப்பாக (mating call) இருக்கிறது, ஆனால் பாலுறவுக்கு எதிராக (against mating). எல்லா சமூகச் சூழல்களிலும் பாலினங்களுக்கிடையே ஆரோக்கியமான இடை வெளியைப் பேணு. அறிவியலற்ற, பழமையான, மூளைச்சலவை செய்யும் மூடர்களால் வழிநடத்தப்பட்டு துன்பப்படாதே. யோபு 5:13–14; ரோம 1:22

90. தீர்க்கதரிசியாக மாறு

என்ன சொல்வது, எப்போது சொல்வது, எங்கே சொல்வது, ஏன் சொல்வது, யாருக்குச் சொல்வது, எவ்வளவு சொல்வது, எப்படிச் சொல்வது -- இவையே ஒரு தீர்க்கதரிசியை ஒரு நச்சேற்றுபவனிடமிருந்தும், குணப்படுத்துபவனை காயப்படுத்துபவனிடமிருந்தும், கட்டுபவனை அழிப்பவனிடமிருந்தும், ஆசீர் வதிப்பவனை சபிப்பவனிடமிருந்தும் பிரிக்கின்றன. நீதி 10:11, 19, 21; 18:21; 29:18; ஏசா 49:1–4; 54:17; எரே 1:1–10; எசே 3:16–18; எபே 4:29–30; 5:4

91. இடம் கொடு (Give your room)

மேல்வீட்டறைக்கு போதிய கழிப்பறைகள் இல்லாதிருந்தன. ஆனால் மிகப் பரிசுத்தமான ஆவியானவர் சபை வரலாற்றைத் அங்கே தொடங்கினார். தொழுவத்திற்கு கை கழுவும் தொட்டியோ கிருமிநீக்கம் செய்யப்பட்ட துணியோ இல்லை. ஆனால் தேவனுடைய குமாரன் முக்தி வரலாற்றை அங்கே தொடங்கினார். உன் அறை மேற்கண்ட அறைகளை விட மிகவும் தாழ்மையானதாய் இருக்கலாம். உன் அறையைத் தேவனுக்குக் கொடு. நீ வரலாறு படைப்பாய். லூக் 2:7; அப் 1:13–14; 2:1–4

92. ஆவிக்குரிய பணியாளர் (Outsourcing)

நம் வாழ்விலும் வேலையிலும் பல விஷயங்களை வசதிக்காகவோ, சிறந்த விளைவுகளுக்காகவே மற்றவரிடம் கொடுக்கலாம் (Outsource). எனினும் மூன்று விஷயங்கள் ஒருபோதும் அவுட்சோர்ஸ் செய்யக்கூடாது -- தனிப்பட்ட ஜெபம், வேத தியானம், தேவனுக்கு கீழ்ப்படிதல். ஆவிக்குரிய தந்தையரும் வழிகாட்டிகளும் பரஸ்பர ஜெபிப்பவர்களும் நமக்குத் தேவை. ஆனால் மத வணிகர்களைத் தவிர். 1 தீமோ 2:5

93. விதிவிலக்கு நியதியாக்கப்படுதல் (Exception and Norm)

காலத்தால் நிரூபிக்கப்பட்ட நரகத்தின் தந்திரம் என்னவெனில், விதிவிலக்கை (exception) நியதியாக வலிந்து ஏற்படுத்தி, நியதியை (norm) விதிவிலக்காக வெளியேற்றுவதே. விதிவிலக்கிற்காக ஆயிரம் முறை, ஆயிரம் டெசிபல் அளவில் கூச்சலிட்டு பெரும்பான்மையினர் அதை தங்கள்

சொந்த நியதியாகவே (norm) ஏற்க செய்வது. ஆகவே, எந்த நெறிமுறைப் பிரச்சனையிலும் ஐயம் இருந்தால், வேதத்தையும் அறிவியலையும் தீவிரமாக ஆராய்ந்து தேவனுடைய தீர்க்கதரிசிகளை கவனமாகக் கேள். பிறகு பாறை போல உறுதியாக நில்.

94. மனித உரிமை இல்லை (Human Right)

உரிமை என்பது, அதை வழங்க உரிமையுள்ள ஒருவரால் வழங்கப்படுவது. மனித உரிமையை மனிதர்களால் மனிதர்களுக்கு வழங்க முடியாது. நமது தலைமுறையின் மிகச் சிறந்த இயற்பியலாளரான ஸ்டீவன் ஹாக்கிங், புத்திசாலியான வேற்றுகிரகவாசிகள் மனிதகுலத்தை அழிக்கும் உரிமையையும் சக்தியையும் குறித்து சரியாகவே பயந்திருந்தார். ஒரு நெறிமுறையான படைப்பாளன் (Ethical God) இல்லை என்றால் மனித உரிமை என்பதுமில்லை. வலிமையே நியாயம். Might is right.

95. ஜெபத்திற்குப் பதில் இல்லையா?

"அப்பா, பிதாவே, உமக்கு எல்லாம் முடியும். இந்தப் பாத்திரத்தை (மனிதரின் தோல்விகளுக்கான சிலுவை) என்னைவிட்டு நீக்கும். ஆனாலும் என் சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது." இது மனித வரலாற்றில், பதிலுக்குத் தகுதியான மிக உன்னதமான ஜெபம். ஆனாலும் பிதாவாகிய தேவன் அதற்குப் பதிலளிக்கவில்லை. ஏன்? இன்று உன் ஜெபமும் என் ஜெபமும் இயேசுவின் நாமத்தில் பதிலளிக்கப்படும்படி. உன் ஜெபத்திற்கு மறுக்கப்பட்ட, தாமதப்படுத்தப்பட்ட, மாற்றப்பட்ட அல்லது குறைக்கப்பட்ட பதில் எப்போதும் ஒரு உயர்ந்த நோக்கத்தைக் கொண்டி ருக்கிறது. எரே 29:10–11; 32:17–19, 27; மத் 26:36–44

96. 'தேவன் நியாயமற்றவர்'

"நான் குறைபாடுள்ளவன் என்பதை ஒப்புக்கொள்கிறேன், ஆனால் என் சிறிய, குறுகியகால தோல்விகளுக்கு நீடித்த வேதனை எனக்கு அவசியமில்லை." உண்மைதான். நரகம் அதன் கடுமையில் படிப்படியாக(graded) அளவிடப்பட்ட ஒரு இடம். எனினும் நரகம் ஒரு வஞ்சக பொறி (trap). சிறு தவறான படிகளால்கூட, அதன் சுற்றுவட்டத்திற்குள் சாகசம் செய்யும் அனைவரையும் அது இழுத்துக்கொள்கிறது. வழிதவறிய குடிமக்களைத் தங்கள் மனித கவசமாகப் (human shield) பயன்படுத்தும் பயங்கரவாதிகளைப் போல, நரகத்தில் உள்ள தீய உயிர்கள் வழிதவறிய மனிதர்களைத் தங்கள் கவசமாக்க விரும்புகின்றன. நரகம் மனிதனுக்காக அல்ல, கலகக்கார தீய ஆவிகளுக்காகவே படைக்கப்பட்டது. மனிதர்களை நரகத்திற்கு இட்டுச்செல்லும் இரண்டு காரணிகள் உள்ளன. முதலாவது, மனந்திரும்பாதவர்களும், மன்னிக்காதவர்களும் அங்கு முடிகிறார்கள். இது வேண்டுமென்றே செய்யப்படும் நெறிமுறைத் தேர்வுக் காரணி. இரண்டாவது, அலட்சியமான அல்லது அலைந்து திரிபவன் எதிரி தேசத்தில் விழக்கூடும். பிதாவின் வீட்டில் பாதுகாப்பாக இரு. மத் 10:14–15, 27–33

97. ஓரினச்சேர்க்கை : அறிஞர்களிடமிருந்து நாடுகளுக்கு: Scholars to Nations:

விலகிய (deviant) இனப்பெருக்க நாட்டம், மரபணுவால் தீர்மானிக்கப்பட்ட (co genital) , பிறப்புக்கு முந்தைய (prenatal) பண்பாக, நூறுக்கும் மேற்பட்ட வர்களில் சுமார் ஒருவரிடம் காணப்படுகிறது; இதைத் தண்டிப்பது அவர்களின் மனித உரிமையை மீறுவதாகும் என்பதால் தண்டிக்க இயலாது.

அவர்கள் சம உரிமை, மரியாதை, பாதுகாப்பு, வாழ்வாதார உதவி மற்றும் மருத்துவப் பராமரிப்புக்குத் தகுதியானவர்கள்.

அவர்களில், திருநர்கள் (Transgender) தெளிவாக வரையறுக்கப்பட்ட, எல்லைக்குட்பட்ட ஒரு குழுவினர் (Bounded Set). அவர்கள் சமூக-பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்படக்கூடியவர்கள்; அரசின் பாதுகாப்புக்கும் உதவிக்கும் தகுதியானவர்கள். இரண்டாவதாக, மரபணுவால் தீர்மானிக்கப்பட்ட (co genital), பிறப்புக்கு முந்தைய (prenatal) பெண் ஓரினச்சேர்க்கையாளர்கள் (Lesbians); இவர்கள் மிக மிகச் சிறிய குழுவினர். மூன்றாவதாக, இருபாலீர்ப்பாளர்கள் (Bisexuals); இவர்கள் எல்லைக்குட்பட்ட குழுவினர் (Bounded set) அல்லர், ஏனெனில் இவர்களுக்கு மரபணு ரீதியான, பிறப்புக்கு முந்தைய இரட்டை நாட்டம் இல்லை. இது பெரும்பாலும் பிறப்புக்குப் பிந்தைய சமூகப் பழக்கமும், தனிப்பட்ட தேர்வும் (choice) சார்ந்த விஷயம் — சோதோம் கொமோரா நகரங்களின் நிலையைப் போல. ஆண் ஓரினச் சேர்க்கை யாளர்களுக்கும் (HOMO) எதிர்பாலீர்ப்பாளர்களுக்கும் (HETRO) இடையே எச்.ஐ.வி (HIV) / பால்வினை நோய்கள் பரவுவதற்கு இருபாலீர்ப்பாளர்களே முதன்மை வழித்தடமாக உள்ளனர்.

நான்காவதாகவும் முக்கியமாகவும், ஆண் ஓரினச் சேர்க்கை யாளர்கள் (Gay – MSM). நூறுக்கும் மேற்பட்டவர்களில் சுமார் ஒருவரிடம் காணப்படும் ஆண்-ஆண் ஈர்ப்புக்கு, பிறப்புக்கு முந்தைய (pre natal) மரபணுக் காரணிகள் பங்களிக்கின்றன. உடல் ரீதியான சவால்களை எதிர்கொள்ளும் மற்றவரைப் போலவே (physically challenged) , ஆண் ஓரினச் சேர்க்கை யாளர்களுக்கும் மருத்துவப் பராமரிப்பு, சமூகப் பராமரிப்பு மற்றும் சமூக விலக்கு (exception) தேவை. இந்தப் பராமரிப்பைப் பெற, அவர்களுக்குத் தேவையான தனியுரிமையை உறுதிசெய்ய, அவர்கள் ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள் (SMS) என்று மருத்துவ ரீதியாகச் சான்றளிக்கப்பட வேண்டும்.

அமெரிக்கன் ஜர்னல் ஆஃப் பப்ளிக் ஹெல்த், அமெரிக்க CDC தரவுகள், கனடா மற்றும் டென்மார்க் ஆய்வுகள், WHO புள்ளிவிவரங்கள், இந்திய தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுப் புள்ளிவிவரங்கள் ஆகியவை, ஆண் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு எச்.ஐ.வி மற்றும் பிற பால்வினை நோய்கள் சுமார் 15 மடங்கு அதிகமாக ஏற்படுகின்றன எனக் கூறுகின்றன. எதிர் பாலீர்ப்பாளர்களுடன் ஒப்பிடும்போது ஆண் ஓரினச்சேர்க்கையாளர்களின் ஆயுட்காலம் 21 ஆண்டுகள் வரை குறைவு என்று கனடாவின் வான்கூவர் 1992-இல் அறிவித்தது. இப்போது இது மேம்பட்டுள்ளது.

ஆனால், அரசியல் நிர்ப்பந்தங்களால், “Privacy” என்று காரணம் கூறி, இப்போது எல்லா அரசுகளும் ஆண் ஓரினச்சேர்க்கையாளர்களிடையே உள்ள எச்.ஐ.வி இறப்பு விகிதங்களையும் குறைந்த ஆயுட்காலத்தையும் வெளியிடுவதை நிறுத்திவிட்டன.

தத்தெடுப்பு (adoption) அல்லது வாடகைத் தாய் முறை (surrogation) மூலம் ஒரே பாலினப் பெற்றோரால் வளர்க்கப்படும் குழந்தைகள் மிக அதிகமான நடத்தைச் சிக்கல்களை எதிர்கொள்வதாகப் பல்வேறு அமெரிக்க மாநில அமைப்புகள் பதிவு செய்துள்ளன. இத்தகைய கட்டாயமான செயற்கை இல்லமும், பெற்றோர் வளர்ப்பும், குழந்தையின் மனித உரிமையை (child human right) மீறுகின்றன.

99 சதவீதத்துக்கும் மேற்பட்ட பெரும்பான்மையான, நெறிசார்ந்த எதிர் பாலீர்ப்புக் குடிமக்கள் (hetro sex society) , ஓரினச்சேர்க்கைக்கான சட்ட அனுமதியைத் தங்களுக்கும் நீட்டிக்குமாறு அரசுகளிடமோ நீதி

மன்றங்களிடமோ ஒருபோதும் கேட்கவில்லை; மருத்துவ ரீதியாக ஆண் ஓரினச்சேர்க்கையாளர்கள் எனச் சான்றளிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே அது கோரப்பட்டது. சுமார் பத்தாயிரத்தில் ஒருவராக உள்ள திருட்டு மனநோயாளிகளின் (Kleptomaniacs) திருட்டை அரசு பொறுத்துக்கொள்கிறது என்பதற்காக, எல்லாக் குடிமக்களுக்கும் திருட்டைச் சட்டப்பூர்வமாக்குவது எவ்வளவு பைத்தியக்காரத்தனமோ, அவ்வளவு பைத்தியக்காரத்தனமானது இது.

ஏனெனில் லட்சக்கணக்கான எதிர்பாலீர்ப்பு (hetro) இளைஞர்கள் வேடிக்கைக்காக ஓரினச்சேர்க்கைப் (homo) பழக்கத்தில் ஈடுபடுகின்றனர். நாடு முழுவதும் எச்.ஐ.வி பரவாமல் இருக்க, அவர்கள் சட்டத்தின் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும். ஏனெனில், WHO AIDS Journal 2006-இன்படி ஒவ்வொரு ஆண் ஓரினச்சேர்க்கையாளருக்கும் 7 பாலியல் துணைகளும் (Partners), பிரெஞ்சு JAIDS Journal-இன்படி 10 துணைகளும், அமெரிக்க NIH 2013-இன்படி ஓராண்டில் 4 துணைகளும், பெல்ஜியம் APH-இன்படி ஓராண்டில் 4 துணைகளும் தேவைப்படுகின்றனர். இதில் அவர்களால் நிகழும் கடுமையான குழந்தைத் துஷ்பிரயோகமும் அடங்கும்.

பிறப்புக்குப் பின் ஓரினச்சேர்க்கைப் பழக்கத்தைப் பெற்று (post natal homo), மீண்டும் நெறிசார்ந்த (hetro) பழக்கத்துக்குத் திரும்ப விரும்புவோருக்கு, சீரமைப்புச் சேவைகள் (Reparative services – மத அடிப்படையிலானவை அல்லது மதச்சார்பற்றவை) உள்ளன.

இளைஞர் விடுதிகள்(HOSTELS) போன்ற, மனசாட்சியுள்ள சமூக நிறுவனங்கள் மேற்கொள்ளும் பாதுகாப்பான பாலினப் பிரிப்பைத் (segregation) தடுப்பதன் மூலம், குழந்தைகள் மீதோ, சம்மதிக்காத எதிர்பாலீர்ப்பு (non consenting hetro) இளைஞர்கள் மீதோ, ஓரினச்சேர்க்கைப் பழக்கத்தைத் (homo) திணிக்க, உலகில் எந்த அரசுக்கோ, நீதிமன்றத்துக்கோ அதிகாரம் இல்லை. (vide our web for full Document.)

98 ஆபாசப் படங்கள் (PORNOGRAPHY)

ஐக்கிய நாடுகள் சபையின் UNICEF கூற்றுப்படி, "ஆபாசப் படங்கள் குழந்தைகளுக்கு (மற்றும் இளைஞர்களுக்கு) தீங்கு விளைவிக்கக்கூடும்; மோசமான மனநலம், பாலினப் பாகுபாடு, மனிதர்களைப் பொருளாகப் பார்க்கும் மனப்பான்மை மற்றும் பிற எதிர்மறை விளைவுகளுக்கு வழிவகுக்கக்கூடும்." "மூளையின் டோபமைன் உணர்திறன் குறைவு, பதற்றம், மனச்சோர்வு, பாலியல் செயலிழப்பு, சமூகத் தனிமை மற்றும் ஆக்கிரமிப்பு (aggressive) மனப்பான்மை" குறித்து இங்கிலாந்தின் தேசிய சுகாதார சேவை (NHS) எச்சரிக்கிறது.

நீ ஆபாசப் படங்களைப் பார்த்தால், நீ பிசாசின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள ஒரு மன நோயாளி. 1 உன் கைப்பேசியிலிருந்து எல்லா ஆபாசப் பொருட்களையும் நீக்கு. 2 எல்லா ஆபாசச் சேனல்களையும் முடக்கு. 3 உன் கைப்பேசியையும் படுக்கையறையையும் உன் தாயின் படத்தாலும் (கத்தோலிக்கர்கள் அன்னை மரியாளின் படத்தையும் சேர்க்கலாம்) பரிசுத்தம் குறித்த வேதாகம வசனச் சுவரொட்டிகளாலும் நிரப்பு. 4 தினமும் 30 நிமிடங்கள் வேதாகமத்தைப் படி. 5 ஐந்து நாட்கள் உபவாசித்து ஜெபி. நீ விடுதலை பெருவாய்.

99. உன் திருமண வளர்ச்சிக்கான பத்து படிகள்

1. குடும்ப ஜெபத்திற்குப் பிறகும் பிள்ளைகள் தூங்கியபின்னும், தம்பதி நாள்தோறும் அரை மணிநேரம் ஜெபிக்க வேண்டும். குடும்ப ஜெபம் பிள்ளைகளின் மட்டத்தில்; தம்பதி ஜெபம் பெரியவர் மட்டத்தில். 2. தொலைபேசி, தொலைக்காட்சி, சமூக ஊடகங்களில் நேரத்தை கடுமையாகக் குறை. இவை குடும்ப ஆரோக்கியத்திற்கு புற்றுநோய் போன்றவை. 3. வாராந்திர உபவாச ஜெபம். 4. மனைவியுடனும் பிள்ளைகளுடனும் தினசரி மாலை குடும்ப ஓய்வு நேரம். எல்லோருடைய பிறப்பு, இறப்பு, திருமண நினைவு நாள் விழாக்களுக்கும் செல்வதைத் தவிர்/குறை. பிணைப்புக்காக அனைவரும் ஒன்றாக இரவு உணவை வீட்டில் உண்ணுங்கள். 5. உன் நிதி, செலவு, வங்கிக் கணக்குகள் குறித்து முற்றிலும் வெளிப்படையாக இரு. வெளிப்படைத்தன்மையின்றி அன்பு என்பது ஒரு கட்டுக்கதை. 6. மாற்று பாலின பணியாளருடன் ஒருபோதும் தனியாக பயணிக்காதே. அது அவசியமானால், அந்த வேலையை ராஜினாமா செய். 7. மனைவிமார்களே, உங்கள் அலுவலகத்து சக ஊழியர்களுக்காக அல்ல, வீட்டில் உங்கள் கணவனுக்காக சிறந்த ஆடையிலும் புன்னகையிலும் இருங்கள். உன் கணவன் வேறொன்றுக்கோ வேறொருவருக்கோ அடிமையாகாதபடி (addiction) நீயே அவனுடைய போதையாய் (addiction) இரு. 8. வெளியூரில் இருக்கும்போது, அடிக்கடி தொலைபேசி அழைப்புகள், மொபைல் புகைப்படங்கள், உன் பிள்ளைகளின் மனைவியின் குரல்கள் மூலம் வீட்டில் இருப்பதைப் போல் இரு. YMCA போன்ற கிறிஸ்தவ மையங்களில் தங்கு. ஒழுக்க பாதுகாப்பிற்காக முடிந்தால் ஹோட்டல்களைத் தவிர். 9. 'நன்றி, நான் தவறு செய்துவிட்டேன், மதிப்புமிக்கது, மன்னிக்கவும், எனக்கு ஆலோசனை தேவை, மிக நல்லது' என்ற வார்த்தைகளைப் பயிற்சி செய். 10. திருமண பிரச்சனைகளில் முதிர்ந்த வழிகாட்டிகளிடமிருந்து (உன் உறவினர் களிடமிருந்து அல்ல) ஆலோசனை பெறு. இல்லற அறிவியல் (Home Science) ஆழ்ந்து கற்க வேண்டிய ஒரு அறிவியல். திருமண கருத்தரங்குகளில் கலந்துகொள், சிறந்த பாடங்களைப் படி, மூத்த வழிகாட்டிகளுக்குக் கீழ்ப்படி.

100. மனித உறவுகளின் வரையறைகள்

அ. வாழ்க்கைத் துணை -- வாழ்நாள் முழுவதும் -- ஆவியிலும் மனதிலும் உடலிலும்.

ஆ. நண்பர்கள் -- நீண்டகாலம் -- ஆவியிலும் மனதிலும் -- ஒரே பாலினத்தில் மட்டும்.

இ. வேலைத் தோழர்கள் -- வேலை காலத்திற்கும் நோக்கத்திற்கும் மட்டும் -- படிப்பு, வேலை, சமூகத் தேவைகள் -- ஒரே பாலினம், தவிர்க்க முடியாதவரை.

ஈ. அலுவலகத் தோழர்கள் -- அலுவலக நேரத்திற்கும் இடத்திற்கும் நோக்கத்திற்கும் மட்டும்; மிகவும் அவசியமானால் இருபாலினமும் ஆகலாம், ஆனால் இருவராகப் பயணிக்கக்கூடாது.

உ. வகுப்புத் தோழர்கள் -- வகுப்பு நேரத்திற்கும் இடத்திற்கும் நோக்கத்திற்கும் மட்டும் -- அவசியமானால் இருபாலினமும் ஆகலாம்.

ஊ. தகவல் தொடர்பாளர்கள்(INFORMATES) -- சமூக ஊடக தொடர்புகள் – அத்தியாவசிய, தனிப்பட்டதல்லாத, நோக்கத்திற்கான தகவலை மட்டும் அனுப்பவும் பெறவும் -- நெறிமுறையான (ethical) சமூக நடவடிக்கை களுக்காக மட்டும் -- தனிப்பட்ட தகவலைப் பகிர்வதை கண்டிப்பாகத் தவிர். நீதி 16:2; 21:2

101. ஆவியின் ஓட்டம் (River flow)

பெரும்பாலான ஆசிரியர்கள் எசேக்கியேல் 47ஐ பரிசுத்த ஆவியின் ஓட்டமாக விளக்குகிறார்கள். அது உண்மைதான். எனினும் அது அபிஷேகம் பெற்ற விசுவாசி, தான் செல்லும் இடமெல்லாம், தான் செய்யும் செயலெல்லாம், தான் பேசும் வார்த்தையெல்லாம், தன் தேசத்தை ஆசீர்வதிக்கும் பரிசுத்த ஆவியின் வாய்க்காலாக இருப்பதையும் குறிக்கிறது; நோயுற்றோருக்கு குணமளித்தல், மனம் நொறுங்கியோரைக் கட்டியெழுப்புதல், ஒடுக்கப்பட்டோருக்கு விடுதலை, இருளிலிருப்போருக்கு ஒளி, நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கை. உன் ஆவிக்குரிய அபிஷேகம் உன் சமுதாயத்திற்குப் பாய்கிறதா, அல்லது உன் அபிஷேகம் தனிப்பட்ட கை-பம்பு அல்லது சூடான தண்ணீர்ப் புட்டி மட்டுமா? நீதி 10:11,21; ஏசா44:3;61:1–3; எசே 47:1–12; லூக் 4:18–19; யோவா7:37–39

102. பழைய மற்றும் புதிய உடன்படிக்கை (Old and New Covenant)

சட்டத்தின் ஆவியும் (spirit of the Law), ஆவியின் சட்டமும் (law of the Spirit) ஒரே தோற்றம், மதிப்பு, நோக்கம் கொண்டவை - மனிதனை தெய்வீகமாக்குவது. மத்தேயு 5:17–20; ரோமர் 8:2

103. சுதந்திர அடிமைகள் (Freedom Slaves)

பாலியல் துன்புறுத்தலுக்கு எதிராக நமக்குக் கடுமையான சட்டங்கள் உண்டு. ஆனால் மின்னணு ஊடகங்களில் மிருகத்தனமான ஆபாசத்திற்கு எதிராக சட்டம் இல்லை, ஏனெனில் அது 'கருத்து சுதந்திரத்தை' மீறுகிறது. குடிபோதையில் ஓட்டி கொல்வதற்கும், குடிபோதை வீட்டு வன்முறைக்கும் நமக்குச் சட்டங்கள் உண்டு. ஆனால் குடிபோதைக்கோ மது வியாபாரிகளுக்கோ எதிராக சட்டம் இல்லை, ஏனெனில் அது 'நுகர்வு சுதந்திரத்தையும்' 'தொழில் சுதந்திரத்தையும்' மீறுகிறது. வன்முறைக்கு எதிராக நமக்குச் சட்டங்கள் உண்டு, ஆனால் காட்சி ஊடகங்கள் மூலம் வன்முறையை ஊக்குவிப்பதற்கு எதிராக சட்டம் இல்லை, ஏனெனில் அது 'கலைச் சுதந்திரத்தை' மீறுகிறது. நாம் நெருப்பை அணைப்பது போல் நடித்துக்கொண்டு (fire fighters), தீ மூட்டுபவர்களை (fire setters) வைராக்கியத்துடன் காக்கும் ஒரு தலைமுறை. நாம் “சுதந்திரத்திற்கு” அடிமைகள். ரோம 1:22; நீதி 28:5

104. அதிகார உடை அணி (Do power dressing)

திரைப்படம், ஃபேஷன்(fasion), விபச்சாரம், ஆபாசத் தொழில்களில் உள்ள பாலியல் தொழிலாளியின் நோக்கம் (vision), நம் அப்பாவியான இளம் மகன்களை உட்பட எல்லா ஆண்களையும் உடையால் கவர்ந்திழுத்து (power dressing) பாலியல் பாவத்திற்குள் தள்ளுவது. ஆகவே, தேவனுடைய மகளின் நோக்கம் (vision), தன்னைச் சுற்றியுள்ள அனைத்து இளைஞர்களையும் கர்த்தரில் சகோதரர்களாக மாற்ற உதவும் வகையில் அதிகார உடை (power dressing) அணிவதே. 1 கொரி 3:16–17; 6:19; 10:23–24, 31–33; வெளி7:9, 13; 19:2, 8

105. உன்னை ஆசீர்வதிக்க கடமையில்லை (No obligation to bless you)

எல்லா போக்குவரத்து விதிகளையும் பின்பற்றுபவனுக்கு அரசு பரிசு கொடுப்பதில்லை. தன் முழு வருமான வரியையும் செலுத்துபவனுக்கும் இல்லை. ஏனெனில் அவன் தன் சொந்த பாதுகாப்பிற்காகவும், பொது வசதிகளையும், சேவைகளையும் தன் சொந்த பயன்பாட்டிற்காக பெற

இவற்றைச் செய்கிறான். தேவனுடைய எல்லா சட்டங்களுக்கும் கீழ்ப்படிபவன் தன் சொந்த பாதுகாப்பிற்காகவும், நலனுக்காகவும் அதைச் செய்கிறான். அவனை ஆசீர்வதிக்க தேவனுக்குக் கடமை இல்லை. ஆனால் நீ ஏழையையும் தேவையுள்ளவனையும், பலவீனனையும் (பொருள் ரீதியாகவோ, ஆவிக்குரியதாகவோ) சேவிக்கும்போது, தேவன் உன்னை ஆசீர்வதிக்க கடமைப்பட்டவராகிறார். அவர் அப்படி வாக்குறுதி கொடுத்திருக்கிறார். சங் 41:1–3; 82:3–4; நீதி 19:17; 21:13; 22:9; ஏசா 58:6–12; மத் 5:7; லூக் 14:13–14; 16:25; யாக் 1:27

106. யோகா

பல உடற்பயிற்சிகளில் ஒன்றான யோகா தனிநபர் உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது. ஆனால் மனதுக்கும், ஆவிக்கும் அது சுயத்தை நோக்கிய அக ரீதியான அணுகல் (reaching the inner Self) என்று கூறப்படுகிறது. அது இணை மனிதர்களை நோக்கிய வெளிப்புற (outer reach) சேவையில் விளைய வேண்டும். இந்தியாவில் 17 கோடி தீண்டப்படாதவர்களும், 25,00,000 பெண் பாலியல் அடிமைகளும் (sex slaves) உள்ளனர்; உலகின் மிகவும் ஊழல் மிக்க தேசங்களில் ஒன்றாக மதிப்பிடப்பட்டுள்ளது 91 /182. பணக்காரருக்கும் ஏழைக்கும் இடையே 1:5,000ஐ மீறும் பண ஏற்றத்தாழ்வு உள்ளது. நம் மனதை பரலோகத் (cosmic) தேடலுக்காக காலி (empty) செய்யும்போது, அதை பிரபஞ்ச நெறிமுறையாலும் (cosmic ethics) சமூக நீதியாலும் (social justice) நிரப்ப வேண்டும். நமக்கு அதிக சேவா யோகிகள் தேவை. ரோம 12:1; மத் 7:16, 20

107. சாக பிறந்தவர் (Born to die for others)

நம் மீட்பின் நுழைவாயில் யோவான் 3:16. ஆனால் நம் மீட்பின் இறுதி நோக்கம் 1 யோவான் 3:16 -- மற்றவர்களுக்காக நாம் மரிப்பது. பெரும்பாலான போதகர்கள் இந்த இறுதி நோக்கத்தைப் போதிப்பதைத் மிகவும் கவனமாக தவிர்க்கிறார்கள்.

108. கசப்பின் இறக்கம் (Bitter descent)

மற்றவர்கள் மேலான கசப்பு, தன் மேலான கசப்பு, தேவன் மேலான கசப்பு, அவதூறான எண்ணங்கள், மன அடிமைத்தனம், வெறி, அசுத்த ஆவி குடிபுகுதல். கசப்பை பற்றி எச்சரிக்கையாய் இரு; அது ஆவி குடிபுகுதலின் முதல் படி. மற்றவர்களுடன் ஒப்பிடுவதைத் தவிர். தேவனுக்கும் மனிதருக்கும் நன்றி செலுத்து. நீ பெற்ற சிறியதிலும் ஏழையருக்குக் கொடு. கர்த்தருடைய நேரத்திலும், அளவிலும், வழியிலும் உனக்குத் தேவையானதைப் பெறுவாய்; இப்போதோ, நித்தியத்திலோ, உன் வாழ்நாளிலோ உன் சந்ததியிலோ. யோபு 2:9; சங்34:1–3, 8–10; 37:4–7, 23–25; 100:1–5; 103:1–22; எபேசியர் 4:31–32; 1 தெச 5:18

109. உன் வாயைப் பரிசுத்தப்படுத்து

தீர்க்கதரிசி மற்றவர்கள் பேச முடியாததைப் பேசுகிறார், ஏனெனில் தீர்க்கதரிசி மற்றவர்கள் பேசக்கூடியதைப் பேசுவதில்லை. ஏசா 41:15, 18; 49:1–3; யாக் 3:4–10

110. பெருமையையும் பொறாமையையும் தவிர்

நீ மற்றவர்களின் பங்களிப்பால் உருவாக்கப்பட்ட ஒரு விளைபொருள் - மரபியல் ரீதியாகவும், கல்வி ரீதியாகவும், தொழில் ரீதியாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும். சொந்தமாக நீ எதையும் கொண்டுவரவில்லை. ஆகவே,

உன்னைப் படைத்தவருக்கும் - உன் கல்விக்கும், வேலைக்கும், வாழ்விற்கும், ஊழியத்திற்கும் பங்களித்த ஒவ்வொருவருக்கும் வெளிப்படையாய் நன்றியைக் கொடு. ஒவ்வொருவரையும் உயர்த்து. உன்னைச் சுற்றியுள்ள ஒவ்வொரு தேவையுள்ளவருக்கும் சிறு வழிகளில் உதவி செய். அப்போது உன் மேல் பொறாமையோ, 'தீய கண்' என்ற அஞ்ஞானமான பயமோ இருக்காது. நீதி 21:4; 26:4; 1 கொரி 4:7

111. நியாயத்தீர்ப்பு (Judgement)

கடும் குற்றவாளிகள் முதல் மூத்த கிறிஸ்தவ தலைவர்கள் வரை நாம் அனைவரும், நம் மனந்திரும்புதல், மற்றவர்களை மன்னித்தல், கீழ்ப்படிதல் ஆகியவற்றின்படி நியாயம் தீர்க்கப்படுவோம் என்று பரிசுத்த வேதம் கூறுகிறது. கிருபை கிடைக்கிறது, ஆனால் நம் மனந்திரும்புதல், மற்றவர்களை மன்னித்தல், கீழ்ப்படிதல் ஆகிய நிபந்தனையின்படி. மீண்டும் மீண்டும் மறுத்ததால் மனந் திரும்பும் அல்லது மன்னிக்கும் திறனை இழந்த உயிர்களின் கூட்டமே நரகம். பலர் அந்த திறனை இழந்ததை உணரும் முன்பே அதை அறியாமல் படிப்படியாக இழந்துவிடுகிறார்கள். இன்றே மனந்திரும்பு / மன்னி / கீழ்ப்படி. சங் 139:1–24; நீதி 29:1; ஏசா 26:21; எரே 3:16–18; தானி 12:2; மத் 5:11–48; 6:14; 7:1–5; 13:49–50; 25:14–46; மாற் 4:24; லூக் 3:8–9, 17; 17:26–30; யோவா 5:28–29; 16:8; 2 கொரி 5:10–11; 2 பேது 2:4–10; 3:10–13; யூதா 5–7, 17–21; வெளி 20:11–12; 22:12

112. கிருபை வாய்க்கால் (Grace Channel)

மீட்பர் கொடுத்த விலையில் (கீழ்ப்படிதலில்) தேவனுடைய மீட்பு என்னை அடைந்தது, அதனால் தேவனுடைய மீட்பு எனது விலையில் (கீழ்ப்படிதலில்) என் மக்களுக்கு பாய வேண்டும். கிருபை எப்போதும் தகுதியற்ற ஒருவனுக்கு ஒரு நீதிமான் பரிந்துபேசுபவனின் விலையில் (கீழ்ப்படிதலில்) பாய்கிறது. தன் நீதியான தந்தையால் ஒரு வழிதவறிய மகனுக்கும், தன் நீதியான ஜெபிக்கும் போதகரால் தடுமாறும் விசுவாசிக்கும், தன் நீதியான, தியாகம் செய்யும், கீழ்ப்படியும் நற்செய்தியாளரால் ஒரு இருண்ட தேசத்திற்கும். கிருபை தகுதியற்ற ஒருவனை அடைய எப்போதும் யாரோ ஒரு நீதிமான் ஒருவர் (விலை கிரயம் செலுத்துகிறார், ஜெபிக்கிறார்). கிருபை சம்பாதிக்கப்படுவதல்ல. ஆனால் கிருபை வாய்க்கால் (grace channel) பெரும்பாலும் சம்பாதிக்கப்படுகிறது. அதீத கிருபை (Hyper Grace preachers) விற்பவர்களை பற்றி எச்சரிக்கையாய் இரு. நீதியிலும் கீழ்ப்படிதலிலும் தொடர்ந்து வளர்ந்துகொண்டே இரு. ஆதி 18:32; 22:18; சங் 85:10–11; 89:14; 92:12–15; நீதி 21:3; 28:9–13; பிர 8:13–14; ஏசா 53:1–12; 66:1–2; எரே 18:6–10; எசே 22:26–31; மத் 5:13–48; 7:13–23; 10:34–40; மாற் 8:34–36; லூக் 3:4–9; 13:6–9; யோவா 8:33–36; 12:24–25; 15:1–2; 17:19; அப் 24:24–27; ரோம 5:19; 6:19; 13:11–14; பிலி 1:29–30; 2:12; தீத் 2:11–12; எபி 6:4–6; 12:4–14

113. திட்டமிடாத ஜெபம் (Unorganized Prayer)

நீ முடிந்தவரை எந்த இடத்திலும், நேரத்திலும், யாருடனும், தனியாகவும் ஜெபி. தனிப்பட்ட வேலைகளை செய்து கொண்டே ஜெபி. ஒவ்வொரு உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் தனிப்பட்ட (personal) தொலைபேசி அழைப்பிற்கும் மின்னஞ்சலுக்கும் மூன்று நிமிடங்கள் ஜெபி. எல்லா விசுவாசிகளும் தினமும் குறைந்தபட்சம் ஒரு மணிநேரம் தனிப்பட்ட ஜெபத்திலும் (Audio/Print) வேத தியானத்திலும் செலவிட வேண்டும். எல்லா காத்திருக்கும் (waiting)

நேரங்களையும் ஜெப நேரங்களாக மாற்றலாம். இளம் கிறிஸ்தவ ஊழியர்கள் ஜெபத்திலும் வேதத்திலும் இரண்டு மணிநேரம்; மூத்த கிறிஸ்தவ தலைவர்கள் நாளொன்றுக்கு சுமார் நான்கு மணிநேரம் செலவிட வேண்டும். நற்செய்தியாளர் இன்னும் அதிக மணிநேரம் செய்ய வேண்டும். இது ஒழுங்கமைக்கப்படாத (unorganised) ஜெபங்களால் மட்டுமே சாத்தியம். 1 சாமு 12:23; 2 நாளா 7:14; சங் 55:17; எரே 33:3; யோனா 2:1; மத் 6:6; 9:38; 26:41; மாற் 9:29; லூக் 18:1–7; ரோம 12:12; 1 கொரி 14:15; எபே 6:18; 1 தெச 5:17; 1 தீமோ 2:1–4,9,10; யாக் 5:14,16

114. முரண்பாடுகளைத் தீர் (Resolve conflicts)

வாழ்விலோ வேலையிலோ ஏதேனும் ஒரு பிரச்சனையைப் பற்றி ஆறு பார்வைகள் உண்டு. அவனுடையது, அவளுடையது. அவளுடைய பார்வையைப் பற்றிய அவனுடைய பார்வை. (his perception about her perception)அவனுடைய பார்வையைப் பற்றிய அவளுடைய பார்வை. உண்மைத் தகவல்கள் (facts). சத்தியம் (Truth). சத்தியமே தேவனுடைய பார்வை, இது நிலையற்ற (transient) தகவல்களையும் காரணிகளையும் சூழலையும் உள்ளடக்கியும் இருக்கிறது. தேவையானால் பல மணிநேரம், நாட்கள் கூட ஜெபி. பரிசுத்த வேதத்தை தியானி. பாதிக்கப்பட்டவரை முழுவதுமாகக் கேள். பல தெய்வீக மூத்தோரிடம் ஆலோசனை பெறு. நீ தெய்வீக சத்தியத்தை (Truth) அடைந்து பிரச்சனையைத் தீர்ப்பாய். சங் 133:1; மத் 5:9; 18:18–20; லூக் 12:57–58; 1 கொரி 6:1–10

115. தேவனை பற்றி எச்சரிக்கையாய் இரு (Beware of God)

"உன்னைத் தொடுபவன், என் கண்மணியைத் தொடுகிறான்" என்பது, நீ கடினமான நடவடிக்கை எடுக்கத் திட்டமிடும் அந்த குறைபாடுள்ள விசுவாசிக்கு, குறிப்பாக தேவனுடைய ஊழியருக்கு தேவனால் கொடுக்கப்பட்ட வாக்குறுதி. எண் 12:3–9; 1 தெச 5:12–15

116. பொருள், அந்தஸ்து, பிரிவினை (Mammon, status, seperation)

ஏழை பெண்களின் மேல் முழு ஆண் ஆதிக்கத்தை நீக்கவும் தம்பதிகளுக்கிடையேயான ஒன்றிணைவை மேம்படுத்தவும், ஏழை பெண்களின் பொருளாதார சுயசார்பை நாம் அனைவரும் வலுவாக ஊக்குவிக்க வேண்டும். கீழ் நடுத்தர வர்க்க குடும்பங்களில், மனைவிக்கு ஒரு இலகுவான தொழில், குடும்ப ஆரோக்கியத்திற்கு பாதிப்பில்லாமல் பொருளாதார நலனை கணிசமாக மேம்படுத்தலாம். மேல் நடுத்தர வர்க்கத்திலும் உயர் வர்க்கத்திலும் தொழில், அந்தஸ்தின் அடையாளமாகவோ, பாலின சமநிலையின் அடையாளமாகவோ, வீட்டுப் பொறுப்பிலிருந்து தப்பிக்கும் வழியாகவோ மாறும்போது, மனைவி விவாகரத்தை தேர்ந்தெடுக்கிறாள். ஒன்றிணைய நேரமோ ஆர்வமோ காரணங்களோ அவளிடம் இல்லை. இது குறிப்பாக இந்தியாவில் சாத்தியமானது, ஏனெனில் அடிமை பணிப்பெண்கள் சொற்ப ஊதியத்திற்கு, சமையலறையையோ பிள்ளைகளையோ கவனிக்க ஏராளமாக உள்ளனர். உண்மையான வலி உன் விவாகரத்திற்குப் பல ஆண்டுகள் கழித்தே வெளிப்படும், உண்மையான சேதம் உன் பிள்ளைகளின் வாழ்நாளில் மட்டுமே தெரியும். உபா 30:19–20

117. வேரும் கனியும் (Root and Fruit)

புனித விசுவாசம் இரண்டு கால்களில் நிற்கிறது -- அதன் வரலாற்றுத்தன்மை (வேர்) மற்றும் அதன் தற்போதைய நெறிமுறை பயன் (கனி). இன்று நெறிமுறை கனி கொடுக்காமல் வேருக்கு எந்த உபயோகமும் இல்லை. தற்காலிக எந்த பயனும், வரலாற்று வேர்களைச் சார்ந்திராமல் வாடிவிடும்.

118. அறியாமை

ஒரு மனிதன் குழந்தையாகப் பிறக்கும்போது அவன் அழுகிறான், அவனைச் சுற்றியுள்ள மற்றவர்கள் அவனுடைய அறியாமையைக் கண்டு புன்னகைக்கிறார்கள். (நீதியான விசுவாசத்துடன்) அவன் இறக்கும்போது, அவனைச் சுற்றியுள்ள மற்றவர்கள் அழுகிறார்கள், அவனோ அவர்களுடைய அறியாமையைக் கண்டு புன்னகைக்கிறான்.

119. விசுவாசம்

விசுவாசம் என்பது நம்பிக்கையும் கீழ்ப்படிதலும். நீ அறியாத ஒருவனை நம்ப மாட்டாய், நம்பவும் கூடாது. முப்பது ஆண்டுகளாக நீ அறிந்த ஒருவனையே நீ மிகவும் நம்புகிறாய். அல்லது உன் மிகவும் நம்பத்தகுந்த நண்பர்கள் முப்பது ஆண்டுகளாக நம்பிய ஒருவனை நீ நம்புகிறாய். தேவனுடைய நெறிமுறைக் (ethical) குணத்தைப் பற்றிய நேரடியாகவோ மற்றவர்கள் மூலமா பெற்ற உன் அறிவை விட அதிகமாக நீ தேவனை நம்ப முடியாது. வேதத்தை படி.

120. கிருபை நிபந்தனையானது (Grace is conditional)

ஒரு தொடர் கொலைகாரனின் அல்லது கற்பழிப்பாளனின் குற்றத்தை, (அவன் பின்பு அறிக்கை செய்தாலும்) கற்பழிக்கப்பட்டவளின் அல்லது கொல்லப்பட்டவனின் அழுகுரலுக்குச் சமமாகப் பதிலளிக்காமல், தேவன் நிபந்தனையின்றி மன்னிக்க முடியாது, செய்யவும் மாட்டார். தேவன் அப்படிச் செய்தால், தேவன் பெரும் அநீதியின் தேவன் ஆகிவிடுவார். குற்றவாளி பொருளாலோ உறவினாலோ மற்ற வழிகளிலோ முடிந்தவரை பாதிக்கப்பட்டவனுக்கு திருத்தம் செய்ய வேண்டும். இல்லையெனில் அவன் ஏற்றுக்கொள்பவனே (approver) அல்ல. அவனுடைய அறிக்கை போலியானது.

121. சுயம் (Narcissism)

நோவாவின் தலைமுறை மாம்சத்தின் இச்சையால் விழுந்தது. பாபேலின் தலைமுறை வாழ்க்கையின் பெருமையால் விழுந்தது. இன்று நாம் சுயத்தை வழிபட்டு அழிகிறோம்.

122. மற்றவர்களுக்காக வாழு

அப்போது நீ நீண்டகாலமோ மகிழ்ச்சியாகவோ வாழ்வாய். ஆனால் மற்றவர்களின் அபிப்ராயத்துக்காக (opinion) வாழாதே. அப்படி வாழ்ந்தால், நீ உணர்ச்சி ரீதியாகவோ ஆவிக்குரியதாகவோ உடல்ரீதியாகவோ பாதிக்கப் படுவாய்.

123. தேவன் யாருக்காவது பொறுப்பா? (Is God is accountable to any one?)

தேவன் யாருக்கும் பொறுப்பு கூற (accountable) வேண்டுவதில்லை எனில், நான் ஏன் பொறுப்பு கூற வேண்டும்? தேவன் திரித்துவமான மூன்று ஆளத்துவங்களுக்குள் பரஸ்பரம் பொறுப்புக்கூறுகிறார் (mutually accountable in Trinity). அவரே எல்லா பொறுப்புக்கூறுதலின் தோற்றம் (origin). தேவன் தான் கடைப்பிடிக்காத எந்த நெறிமுறையையும் (ethics) போதிப்பதில்லை.

அவருடைய இறையாண்மையும் (Sovereignity) அவருடைய பொறுப்புக் கூறலும் (accountability) முரண்படுவதில்லை, அவை ஒன்றை ஒன்று பூர்த்தி (complement) செய்கின்றன.

124. இறந்தவர்களைக் கொல்ல முடியாது

'சுயமரியாதைக்கு' இறந்தவர்களை மற்றவர்களின் அவமரியாதையால் கொல்ல முடியாது. அவர்கள் தேவனுடைய மரியாதையால் வாழ்கிறார்கள். அவர்கள் தேவனுடைய கனத்திற்காக வாழ்கிறார்கள்.

125. நீ மேலே செல்வாய்

நீ மற்றவர்களை உயர்த்தி சுமக்கும் அளவிற்கே மேலே செல்வாய்.

126. செயற்கை நுண்ணறிவு (ARTIFICIAL INTELLIGENCE)

இதுவரை, செயற்கை நுண்ணறிவின் (AI) மாபெரும் பயன்பாட்டைவிட, மனிதகுலத்துக்கு அது ஏற்படுத்தும் அச்சுறுத்தலே அதிகமாகத் தெரிகிறது. நம் தலைமுறைக்குள்ளேயே மனிதகுலம் அழிந்துவிடக்கூடும் என்ற கணிப்புகள் இப்போது வெளிவருகின்றன. டிஜிட்டல் கண்டுபிடிப்புகளில் ஒருவரையொருவர் முந்த வேண்டும் என்ற மனித அகங்காரமே, மனிதனால் உருவாக்கப்பட்ட இந்த அச்சுறுத்தலுக்குக் காரணமாகிறது. AI-ஐக் குறை கூறாதீர்கள். AI-ஐ உங்கள் எஜமானாக அல்ல, ஒரு பௌதிகக் (Physical tool) கருவியாக மட்டுமே வைத்திருங்கள்.

AI-க்கு உள்ளார்ந்த (innate intelligence) நுண்ணறிவு எதுவும் இல்லை. AI-க்கு எந்த அறநெறியும் (consciousness or ethics) இல்லை. எனவே, தனிப்பட்ட அல்லது சமூக வழிகாட்டுதலுக்காக AI இடம் கேட்காதீர்கள். அது தற்கொலைக்குச் சமமானதாகும்.

127. இந்தப் பெயரல்ல

பல ஆண்டுகள் நான் என் பெயரை உயர்த்த மிகவும் கடினமாக முயற்சி செய்தேன். சமீப ஆண்டுகளில், நித்திய பிரபஞ்சத்தில் ஒரு புதிய பெயராலேயே நான் அழைக்கப்படுவேன் என்பதை உணர்ந்தேன். அது என் தற்போதைய தற்காலிகப் பெயரை உயர்த்த தேவையற்ற உழைப்பைச் செய்வதிலிருந்து இப்போது என்னைக் காப்பாற்றியது.

128. கிருபையும் கீழ்ப்படிதலும்

மனித வாழ்க்கை நன்றாக இயங்குவது, ரயில் பாதையின் இரு தண்டவாளங்களைப் போன்ற இரண்டு பாதைகளில் மட்டுமே -- தெய்வீக கிருபை மற்றும் மனித கீழ்ப்படிதல். இந்த இரண்டு தண்டவாளங்களும் ஒருபோதும் ஒன்றாவதில்லை, ஆனால் எப்போதும் இணைந்தே செல்கின்றன.

129. தேவன் பலமற்றவரா, அறியாதவரா, தீயவரா?

இந்த உலகில் உள்ள துன்பத்தையும் தீமையையும் பொறுத்தவரை, பலருடைய கேள்வி இது. ஆனால் அது அப்படி இல்லை. இந்த உலகம், நமக்கு பிரபஞ்சத்தின் வருங்கால இணை-ஆட்சியாளர்களாக (cogovernors) ஆவதற்கான ஒரு பயிற்சி மைதானம். எல்லா நோயாளிகளும் தங்கள் நோயைக் குறித்து புலம்புகிறார்கள். மருத்துவர்களோ அப்படி இல்லை. மருத்துவர்கள் நோயைக் குணப்படுத்துவதில் பிஸியாக இருக்கிறார்கள்.

அவர்கள் உயர்ந்த சிகிச்சைகளைக் கற்றுக்கொள்வதில் பிஸியாக இருக்கிறார்கள். ஒரு நாள் முழு ஆரோக்கியக் கட்டுப்பாட்டைப் அடைவோம் என்று அவர்கள் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். பெரும்பாலான குடிமக்களுக்கு சில குடிமைப் பிரச்சனைகள் குறித்து புகார்கள் உண்டு. ஆனால் இளவரசருக்கு இல்லை. அவர் குடிமை ஆட்சியைக் (governance) கற்றுக்கொள்வதில் மிகவும் பிஸியாக இருக்கிறார். தற்போது காணக்கூடிய அனைத்து துன்பங்களும் தீமைகளும், தேவனுடைய மகன்கள், கண்ணுக்குப் புலப்படாத பிரபஞ்சத்தின் (invisible cosmos) இணை-ஆட்சியாளர்களாக (co governors) ஆவதற்கான பயிற்சி மைதானமே.

130. பரலோகம் (Heaven)

பரலோகம் என்பது மற்றவர்களுக்காக வாழும் உயிர்களின் ஐக்கியம். ஆகவேதான் தம் குமாரனைத் தியாகம் செய்த பிதாவாகிய தேவன் மிக உன்னத இடத்தில் அமர்ந்திருக்கிறார். அன்னியரான நமக்காக தம் உயிரைக் கொடுத்த குமாரனாகிய தேவன் அமர்ந்திருக்கிறார். நமக்காக அநாம தேயமாக துப்புரவுத் தொழிலைச் செய்யும் பரிசுத்த ஆவியானவர் தேவன் அமர்ந்திருக்கிறார். மூவரும் ஒன்றாக இருக்கின்றனர். முன் வரிசையில் அமர்ந்திருப்பவர்கள், தூரமான அந்நிய தேசங்களில் தங்கள் பிள்ளைகளைப் புதைத்த மிஷனரி தாய்மார்கள். ஒளியற்றவர்களுக்காக கடும் இழப்பையும் தனிமையையும் அனுபவித்த மிஷனரி பிள்ளைகளும் அங்குள்ளனர். இருளில் இருக்கும் தொலைதூர மக்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்லவோ அனுப்பவோ பெரிதும் தியாகம் செய்த எண்ணற்றோரும் அங்குள்ளனர் -- மொழியியலாளர்கள், சமூகப் பணியாளர்கள், ஆசிரியர்கள், சுகாதாரப் பணியாளர்கள், ஜெப பங்காளிகள். வெகுஜன ஊடகங்களில் இவர்களுடைய பெயரோ புகழோ கிடையாது. ஏசா 26:19; 65:17; தானி 12:3–4; மத் 5:11–12; 19:29; 1 கொரி 4:11–12; 2 தீமோ 4:7–8; வெளி 21:3–4, 22–26; 22:1–5

131. பரலோகத்தில் பலன் (Reward in heaven)

பொறாமை என்பது இப்பூமியில், அளவையும் (quantity) தனித்துவத்தையும் (individuality) நாம் மிகவும் தவறாக புரிந்துகொள்வதன் விளைவு. பரலோகில் தனித்துவமும் அளவும் தங்கள் எல்லைகளையும் மதிப்புகளையும் இழக்கின்றன. அங்கு யாரும் எதையும் தனிப்பட்ட முறையில் சொந்தம் பாராட்டுவதில்லை. ஆகவே, பரலோகில் அனைவரும், அனைவரின் மகிழ்ச்சியையும் பகிர்ந்துகொள்கிறார்கள். பரலோகில் நான் விரும்பும் ஒரே பலன் (reward) தேவன் மற்ற அனைத்து பலன்பெறுவோருக்கும் (rewardees) பலனளிப்பதைக் (rewarding) காண்பதே. மாற் 3:35; அப் 2:44; 4:32; ரோம 12:15

புகழும், மகிமையும், ஞானமும், நன்றியும், கனமும்,
வல்லமையும், பெலனும் என்றென்றைக்கும்
தேவனுக்கே உண்டாவதாக.
வெளிப்படுத்தல் 7:12

இந்தச் சிற்றேட்டை மறுபதிப்பு (reprint) செய்யவோ, விநியோகிக்கவோ (distribute), மொழி பெயர்க்கவோ, அல்லது உங்கள் இணையதளத்தில் (website) வெளியிடவோ அனுமதி பெற ஆசிரியரைத் தொடர்பு கொள்ளவும்.

பதிப்புரிமை © 2017. ஆசிரியர்கள், பேச்சாளர்கள், எழுத்தாளர்கள் அல்லது ஊடகங்கள் மேற்கோள் காட்டும்போது, மூலத்தையும் ஆசிரியரையும் முழுமையாகக் குறிப்பிட வேண்டும். மறுப்பு அறிவிப்பு: இந்நூலின் உள்ளடக்கங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ள புகழ்பெற்ற அறிஞர்களால் திருத்தப்பட்டவை (edited). தவறி ஏற்பட்ட பிழைகளோ கருத்துக்களோ புண்படுத்துவதாகத் தோன்றினால், அவற்றிற்காக வருந்துகின்றோம்; அதிகாரப்பூர்வமாக தெரிவித்தால் திருத்தப்படும்.

நன்றியுரை Acknowledgement
கடந்த 50 ஆண்டுகளாக, பின்வரும் அறிஞர்களும் தலைவர்களும் அமைப்புகளும் என் எழுத்துக்களுக்கு வழிகாட்டியும், திருத்தியும், சரிசெய்தும், வளங்களை வழங்கியும், உதவியும் செய்தனர்.

Rev. Dr J.T.K. Daniel, Rev. Dr Roger Gaikwad, Dr Theo Srinivasagam, Dr Roger Hedlund, Dr J.N. Manokaran, Dr Ivan Satyavarta, Dr C. Barnabas, Dr Baskardoss, Dr.M.T.Cherian, Dr Ajit Fernando, Dr Sunand Sumitra, Rev.Dr.C.V.Mathew, Dr. Samuel Meshach, Dr Babu Varghese, Dr S.D.Ponraj, Dr Gene Davis, Sam Thambusamy, Rob Martin, Dave Hicks, Ruth Collins, Dr.Alex Harris, Dr.Jameela George, Rev. Dr Mani Chacko, Dr. P.I. Varghese, Dr Vishal Mangalwadi, Dr Joseph De Souza, Benita Francis, Tehmina Arora, Bennet Emmanuel, Benny Paul, John Fredrick, Titus Paul, John B Samuel, Kingsley Arunodayakumar, Charles Joseph, Seline Augustine, Richard Samuel, Bishop Alfred Frank, Carl Gordon, P.R. Misra, Daniel Sudhakar, Sudhakar Mondhidoka, Dr.Aleyamma Zachariah, Dr. Lal Dena, Dr. Victor Chowdrie, Dr Deivanayagam, Dr Devakala, Dr Shwetha Raghunathan, A. S.Chellappa, Marlene Isaac, Sam Blesson, Andrew Vasanth, Mekala, N Prabakaran, Samson Luke, TRACI, SAC, BCMS, BPM, VIDHYA JYOTHI, JNU Library.

அவர்கள் அனைவருக்கும் நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். அவர்கள் தங்கள் தங்கள் நிபுணத்துவத் துறைகளில் உதவினார்கள். எனவே, இந்த நூலில் உள்ள எல்லாக் கருத்துகளையும் அவர்கள் தனிப்பட்ட முறையில் ஆதரிக்காமல் இருக்கலாம்.

என் ஆவிக்குரிய வாழ்க்கையை ஊழிய வாழ்க்கையை வளர்த்த, வழிநடத்திய பின்வரும் தலைவர்களுக்கு நான் ஆழ்ந்த நன்றியுடையவன்:
Rev. Dr. Sam Kamaleson, Dr Samraj Samuel, Rev Fredrick Stanley, Bros George Verwer, Thomas Samuel, Ray Eicher, R. R. Rajamani, Rev. Dr Theodore Williams, Dr Ralph Winter, Dr Donald Mc Gavran, Dr.Bill Taylor, Dr. David Cho, Dr.K. Rajaratnam, Brothers Emil Jebasingh, Patrick Joshua, P. Samuel, Ezekiah Francis, Jayaseelan, Jesudos, Nehemiah, Joe Durai, Raja B Singh, SJD Gnanapragasam, R. Stanley, J J Ratnakumar, DGS Dinakaran, Bishop Ezra Sargunam, Arch Bishop Alan De Lastic, Arch Bishop Vincent Concesso.

மேற்கண்ட பட்டியல்கள் முழுமையானவை அல்ல. தவறி விடுபட்டவை குறித்து வருந்துகிறேன். திருத்தங்களையும் சேர்த்தல்களையும் அன்புடன் வேண்டுகிறேன். நூற்றுக்கணக்கான பரிசுத்தவான்கள் என் வாழ்விற்கும் நம் பணிக்கும் பங்களித்துள்ளனர். அவர்கள் அனைவருக்கும் நன்றி.

Dr Ebe Sunder Raj: restorationcall@hotmail.com
www.ebesunderraj.in